# நடமாடுங் கல்லூரி

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

முரசொலிப் பதிப்பகம்
131, பிராட்வே சென்னை-1.

முதற் பதிப்பு
மே —1953
உரிமையுடையது.

விலை அணா 12.

அச்சிட்டது : ராயன் அச்சகம் சென்னை-1.

விற்பனை உரிமை :

**எம். சூரி**

14-ஏ குப்பையர் தெரு

சென்னை-1

## நன்றியுரை

15-3-53 அன்று தோழர் **ஆசைத்தம்பி**, அவர்களைச் சென்னையில் சந்தித்தேன். அவரது சில பல கருத்துக்களை தொகுத்து நூல் வடிவில் வெளியிட விரும்பும் என் எண்ணத்தை தெரிவித்தேன்.

மறுநாள் மீண்டும் அவரைக் கண்டேன். களிப்புடன் சில பல கருத்துக்களைப் புத்தக வடிவில் வெளியிட்டுக் கொள்ளும் உரிமையை எனக்கு அளித்தார். எழுத்து மூலம்.

அவர் எனக்களித்த உரிமைகளிலே ஒன்றுதான் இப்போது நாட்டிலே ஏட்டிலே நடமாடும் "நடமாடுங் கல்லூரி" ஆசைத்தம்பி அவர்களைப் பற்றிய அறிமுகம் ஏதும் தமிழகத்திற்கு குறிப்பாக திராவிடத்திற்கு தேவையில்லை. திராவிடம் அவரையும் அவரது தொண்டையும் நன்கு அறிந்துள்ளது. அறிவுப் படையின் அஞ்சாத, ஆற்றல் மிக்க தளபதி அவர் என்பதை! அன்புள்ளத்துடன், **ஆசைத்தம்பி** அவர்கள் அளித்த அன்பளிப்பை என்னால் என்றுமே மறக்க முடியாது. அவருக்கு என்றும் கடமைப் பட்டுள்ளேன்.

புத்தக வடிவில் இதனை வெளியிட்ட "முரசொலி" பதிப்பகத்தாருக்கும், நல்ல முறையில் வெளி வர உதவி புரிந்த தோழர் எம். சூரி; அவர்கட்கும் என் நன்றி!

"நடமாடுங் கல்லூரி"க்குள் நுழையுங்கள்! அறிவுப்படை வரிசையிலே அணிவகுத்து நில்லுங்கள்!

16-4-53
சென்னை

வணக்கம்

**மு. நமச்சிவாயம்**

# நடமாடுங் கல்லூரி

★ ★ ★

## பொதுவாழ்வும் : : பொழுதுபோக்கும்!

★ ★ ★

"போகிறபோக்கிலே, பொழுதுபோக்காக **எதையோ** செய்கிருர்கள், **எதையோ** பேசுகிருர்கள்! அவர்களுக்கு **அதுவே** வேலையல்ல, அவர்களைப் பற்றிக் **கவலைப்பட** வேண்டியதில்லை" என்ற கருத்துப்பட, **காமராஜர்** அண்மையிலே தமது தென்னுட்டுச் சுற்றுப் பயணக் கூட்டங்களிலே பேசிவந்ததாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன!

'**அவர்களுக்கு**' என்று குறிப்பிட்டதும், 'அதுவே' என்று எண்ணிக் கூறியதும் திராவிட இயக்கத்தவரை குறிப்பாக திராவிட இயக்கத்தின் முன்னணி வீரர்களை, தலைவர்களை, திராவிட இயக்கத்தின் கொள்கை, கோட்பாடு, கட்சி—கட்சியின் இலட்சியம்—இலட்சியவளர்ச்சி **என்பதைப்** பற்றிய அவர்களது உதைப்பையும் ஊக்கத்தையுந்தான் என்பதை நாம் உணரவேண்டும். திராவிட இயக்கத்தையும் திராவிட இயக்கத்தின் தலைவர்களையும் குறைகூற வந்த காமராஜர், தம்மை யறியாமலேயே,

திராவிட இயக்கத்தின் மாபெரும் சக்தியை ஒப்பி, எடுத்துக் கூறியிருக்கிறார், வெளிப் படையாக! அவர் கூறிய வாசகங்களுக்கு, வேறு என்ன பொருள்? யோசித்துப்பார்க்க வேண்டும், நாம்! போகிற போக் கிலே, பொழுது போக்காக, எதையோ செய்கிறார்கள், எதையோ பேசுகிறார்கள்! 'அவர்களுக்கு' அதுவே வேலையல்ல! அவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்! இது காமராஜரின் கருத்து!

காமராஜரின் கருத்துப்படி பார்த்தால், திராவிட இயக்கத்தின் முக்கியஸ்தர்கள், யாரும் இயக்கத்தின் முழுநேரத் தொண்டர்களாகவோ, ஊழியர்களாகவோ, முழுநேரமும் இயக்கத்திற்காகவே பாடுபடும் முறை யிலேயோ இல்லை. அவரவர்களுக்கு என்று தனித்தனி வாழ்வு, வாழ்க்கைப்பிரச்னை உண்டு. அவரவர்கள் தமது வாழ்விற்கும் வாழ்வுப் பிரச்னைக்காகவும் தனிப் பட்ட முறையிலே தமது நேரத்தை, காலத்தை, நடை முறையை, உழைப்பை, ஊக்கத்தைச் செலவிடுகின்றனர். இப்படிச் செலவான நேரம்போக, மிகுதி நேரத்தை, பொழுது போக்குக்கான நேரத்தை, ஓய்வு நேரத்தைத் தான் இயக்கத்திற்காகப் பயன்படுத்திப் பாடுபடுகிறார்கள் என்ற உன்மையை உணர்ந்து, ஒப்பி, கூறியும் விட்டார் காமராஜர் என்பது மறுக்க முடியாது.

தங்களது சொந்த வேலைகளைக் கவனித்து விட்டு தமது உற்றார் உறவினர், குடும்பப் பொறுப்பு பாரம் ஆகியவற்றுக்காக, அதற்கான வழியில் வாழ்வைச் செல விட்டு, மீதியுள்ள நேரத்தில், ஓய்வு நேரத்தில் மட்டுமே கட்சிக்காக, கட்சியின் வளர்ச்சிக்காக உழைப்பவர்கள், உழைக்கக்கூடிய நிலையிலே வாழ்க்கைநிலை யமைந்தவர் கள் திராவிட இயக்கத்தின் தலைவர்கள் முதல் தொண்டர் கள் வரையில் என்பது உண்மைதான். மறுக்கவில்லை!

நாங்கள் ஓய்வு நேரத்திலேதான் கட்சிக்காகப் பாடு படுகிறோம். கட்சிக்காகப் பேசுகிறோம், கட்சியை வளர்க்கிறோம், வளர்ச்சிக்கான பிரச்சாரம் புரிகிறோம், என்பதை மறுக்கவில்லை. மறுக்கவேண்டிய அவசியமும் இடையாது, எங்களுக்கு!

நாங்கள் ஓய்வு நேரத்திலே தான் உழைக்கிறோம், கட்சிக்காக. அப்படித்தான் உழைக்க முடிகிறது. நாங்கள் சோம்பேறிகளல்ல, மு ழு நே ர மு ம் உழைக்காதிருக்க!

நாங்கள் கட்சியின் கொள்கையைப் புரியாது, 'கும்பலோடு கும்பலாகக் கோவிந்தா' போடும் கோஷ்டியினருமல்ல. என்றோ ஒரு நாள், இருநாள் மட்டுமே முன் வந்து எங்கள் இலட்சியத்தை இன்பத் திராவிடத்தை, திராவிடத்தின் மக்களது நல்வாழ்வுக்காக அடைந்தே தீரவேண்டும் என்பதை மனதார உணர்ந்து, அதனால் உந்தப்பட்டு, உரிமைப் போர்படையின் அணிவகுப்பில் எப்போதும் உள்ளவர்கள் தான்.

என்ன இருந்தென்ன! உணவு உரிமை யுணர்ச்சி உத்வேகம், புரட்சி மனம், அஞ்சாநெஞ்சம் இன்னும் எவைதான் இருந்தென்ன போயென்ன? ஓய்வு நேரப் பேச்சாளர்தானே, உழைப்பாளர்தானே, என்றுஎங்களைப் பற்றிக் கவலைப்படவேண்டாம் என்று கேலி மொழிகளைக் கூறித் தம்மைத்தாம் தேற்றிக்கொள்கிறார்! தமது சகாக்களையும், 'கவலைப்படவேண்டியதில்லை' என்று கூறித் தேற்றுகிறார், காமராஜர். 'கவலைப்படவேண்டியதில்லை' யாரைப் பார்த்து யார், எதற்காக?

காங்கிரஸ்காரர்களுக்குத்தான், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகிவிட்ட காமராஜர் கூறுகிறார். தி ரா வி ட இயக்கத்தினரைப் பற்றிக் கவலைப்பட

வேண்டியதில்லை யென்று! திராவிட இயக்கம் முழுநேரத் தொண்டர்களேயோ, தலைவர்களேயோ கொண்டதல்ல! ஏதோ பொழுது போக்கும், நேரத்திலே சிலர் உழைப்பதும், பேசுவதும்தான் அந்த இயக்கத்திற்கு உயிர், உணர்வு, உற்சாகம். எனவே அது தொடர்ந்து வளர்ந்து நீடித்திருப்பது நிச்சயமல்ல. ஏன் நீடிக்காது என்பதாகவும் தாமே எண்ணிக் கணக்கிட்டு, தீர்மானித்தும் விட்ட காரணத்தால்தான் காமராஜர் இவ்விதம் கூறியிருக்கிறார் போலும்! அவரது சமீப சுற்றுப்பயணப் பேச்சுகளின் கருத்து இவ்விதமாகத்தானே அமைந்திருக்கிறது?

திராவிடர் இயக்கம், குறிப்பிட்டுக் கூறவேண்டுமானால், திராவிட முன்னேற்றக் கழகம், இந்த நாட்டிலே வேரூன்றி, வளர்ந்து வருவதைக் கண்டு காங்கிரஸ்காரர்கள் உண்மையிலே ஏதோ ஒருவகையான அச்சம்—பயம் தமக்குத் தாமே அடைந்திருக்கிறார்கள், அந்த இயக்கத்தைக் கண்டு, அதன் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்பட்டு, கவலைப்படுகிறார்கள், அதுவும் காங்கிரஸ் கட்சியின் தலைவர் காமராஜர் போன்றவர்கள் கவனத்தைக் கவர்ந்து, அவரும் 'கவலைப் படேல்' என்று வெளிப்படையாக அபயம் அளிக்கும் அளவுக்குக் கவலைப்பட்டனர். கவலைப்படுகின்றனர். என்பது நமக்குக் காமராஜரது பேச்சிலிருந்து தெரியவருகிறது என்றுதானே கூறவேண்டியிருக்கிறது!

ஆம் காங்கிரஸ்காரர்கள், இந்த நாட்டின் ஆட்சிக்கும், ஆட்சிப் பீடத்திலே யமர்ந்து பாத்தியதை கொண்டாடி நாட்டை ஆளுவதற்குத் தாங்கள்தான் ஏகபோக உரிமை பெற்றவர்கள் என்று பறைசாற்றி வருகிறார்கள்.

தங்களுக்குக் குறுக்கே, தங்களுக்கு எதிராக எந்த வித சக்தியும் வரக்கூடாது, இருக்கக்கூடாது; வரவிட

மாட்டோம், இருக்கவிடோம் என்று பேசி, பவனி வரு கிறார்கள், நாட்டில் !

இத்தகைய காங்கிரஸ்காரர்கள், நல்ல முறையிலே நாடெங்கும் பரவிப் பெருகி வளர்ந்து வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டு கிலி கொள்ளாமல் எப்படி இருப்பார்கள் ?

ஒரே கட்சி, ஒரே இந்தியா, ஒரே ஆட்சி என்று எப்போதும் பேசிப்பேசி அதன் மூலம் எதையுமே சாதித்து விடலாமென்று, நினைத்து, ஓரளவு அந்த நினைவு வெற்றியும் தந்திருக்கின்ற காரணத்தால், காங்கிரஸ் காரர்கள் தங்களது பிடிவாத குணத்தை, ஏகாதிபத்தியக் கொள்கையை, அவ்வளவு சுலபத்தில் விட்டுக் கொடுத்து விடமாட்டார்கள் ! தங்களால் ஆனவரை, முழு முயற்சி யையும் செலுத்தி, தங்களது முழு பலத்தையும் எல்லா வழிகளிலும் செலுத்திப்பார்த்து விடுவது என்ற முடி விற்குஅவர்கள் வந்தால், அது அவர்களது பழக்கம்— வீண் பிடிவாதகுணத்தின் கோரவிளைவு என்று தான் நினைத்துப் பரிதாபப்படவேண்டியிருக்கிறது !

நல்ல திட்டங்களோடு, நாட்டு மக்களின் நல்வாழ்வு ஒன்றைமட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, ஆட்சி பீடத்தின் மீது, மந்திரி சபையின் மீது சிறிதும் நோட் டம் செலுத்தாமல், நாட்டின் நாலாபக்கங்களிலும் சுற்றித் திரிந்து, நாட்டுநிலையை நாட்டாரிடம் நன்கு விலக்க, நல்லறிவை யூட்டி வரும் எங்கள் இயக்கத்தை யும், இயக்கத் தோழர்களையும் பொழுதுபோக்குக் கட்சி பொழுது போக்குக்காக வேலைசெய்பவர்கள், என்று கேலி செய்கிறார் காமராஜர் !

"கவலைப்படாதீர்!" என்று கையமர்த்தி கவலைக்குக் கண்ட மருந்தாகத் தமது கிண்டலையும் கேலியையும் அள்ளிக் கொட்டியிருக்கிறார், தமது பேச்சில்!

பொழுதுபோக்கும் தலைவர்களையும், அவர்களால் வளர்க்கப்படும் இயக்கத்தையும் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று வாய்வீரம் பேசும் காமராஜரும் அவரை சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சியும், கட்சித் தோழர்களும், கட்சியினரால் நடத்தப்படும் அரசாங்கத்தினரும் எந்த அளவுக்கு எம்மைப் பற்றிக் 'கவலைப்படாமல்' இருந்திருக்கின்றனர்—இருப்பர் என்பதை ஆர அமர யோசித்துப் பார்க்கவேண்டுகிறேன், காமராஜரை மட்டுமல்ல, மக்கள் அனைவரையுமே!

எந்த விஷயத்திலே கவலைப்படாமல் இருந்திருக்கின்றனர்! "திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒவ்வொரு அசைவிலும் அரசாங்கத்தின் தலையீடு இல்லையா?

இயக்கச் சார்புள்ள, இயக்கத்தின் இலட்சிய வாடை வீசிடும் சிறுசிறு பிரசுரங்கள், ஏடுகள் மீதும் பாயவில்லையா, ஆளவந்தார்கள்?

இயக்கக் கொள்கை மணம் வீசும் புத்தகங்கள் தடை செய்யப்பட்டனவே, பறிமுதல் செய்யப்பட்டனவே? ஏன்? ஏன்! 'கவலைப்படவேண்டாம்,' என்ற காமராஜரின் கருத்துப்படி சும்மா இருக்கவில்லை, இந்த அரசாங்கம்! எத்தனை நாடகங்கள், நிறுத்தப்பட்டன, நாட்டில் நடிக்கக்கூடாது என்ற ஆட்சியினரின் அடக்குமுறைத் தடைச் சட்டத்தின் பிரயோகத்தினல்?

எத்தனை கூட்டங்கள், இயக்கப் பொதுக் கூட்டங்கள். ஊர்வலங்கள் தடுக்கப் பட்டிருக்கின்றன போலீஸ்

தடைவிதித்த காரணத்தால்! திராவிட இயக்கத்தின் கொள்கை கொண்டமனிதன் வாழ்வது கூடபிடிக்காது போலிருக்கிறதே, காலம் செல்லச் செல்ல! உடையார் பாளயம் வேலாயுதம் பிணமாக்கப்பட்டு மரக்கிளையிலே தொங்கவிடப்பட்டது ஏன்? நெல்லிக் குப்பத்திலே, மஜித் என்ற இளம் வாலிபன் பட்டப் பகலிலே, குத்திக் கொலை செய்யப்பட்டது ஏன்?

சென்னையிலே, பகுத்தறிவுக் கொள்கை கொண்டு வாழ்ந்து வந்த பாண்டியன், படுகொலை செய்யப்பட்டதும், எந்தக் காரணத்தால்! இன்னும் எத்தனையெத்தனை தேனீ, கம்பம், கமுதிபோன்ற கலகங்கள், காலிவேலைகள் இயக்கக் கூட்டங்களைக் கலைத்துக் குழப்பம் உண்டாக்கிட நடைபெற்றன, நாட்டில்? தெரியாதா மக்களுக்கு? அடக்கமுறை, அடிதடி தடியடிதர்பார், கைது, காவல், தண்டனை, துப்பாக்கிப் பிரயோகம் எல்லாம் கையாளப் பட்டனவே, எங்கள் மீது? ஏன்?

காமராஜர் கூறுகிறார், கவலைப்படவேண்டாம், என்று கவலையைப் போக்கிக் கொள்ள! பரிதாபம்! அலட்சியம் செய்து, கட்டுப்பாடாகத் திட்டமிட்டுத் தூற்றி, பொய்ப்பிரசாரங்கள் பலபல புரிந்து, நாஸ்திகர் என்று நாடெங்கும் பரப்பி, செய்திகளைத் திரித்துப் பத்திரிகைகளிலே போட்டு கிண்டல், கேலி புரிந்து பல விதங்களிலே மக்களிடமிருந்து நம்மைப் பிரித்திட, மறைத்திட, மாறுபடுத்திக் காட்டிட, செய்த அத்தனை முயற்சிகளும் தேய்ந்து ஓய்ந்து போன நிலையிலே. நம்மைப் பற்றிக் கவலைப்படும் கட்டத்திற்குக் காங்கிரஸ்காரர்கள் வந்து விட்டிருக்கிறார்கள் இன்று!

இதனைக் காமராஜர் போன்றார், கவலைப் படவேண்டியதில்லை, என்று அலட்சியமாகவும், அசட்

டையாகவும், அவர்களென்ன சாமான்யம், என்பது போலப் பேசி, நாம் ஒரு பொருட்டல்ல என்பதாக மக்களிடையே பேசி விட்டதாக நினைத்துக் கும்மாள மடிக்கின்றனர்! ஒரு உண்மையைக் காமராஜர் போன்றோர் உணர வேண்டும்.

மகத்தான எதிர்ப்புகளுக்கும், ஏசல் பூசல்களுக்கிடையிலேயும், மங்கி மறையாது தழைத்துத் துளிர்த்து ஓங்கி வளர்ந்து வரும் இந்த இயக்கத்தை பொழுது போக்குககாரர்கள், வளர்க்கும் இயக்கம் என்று குறிப்பிட்டாரே, அதனை மீண்டும் நினைவில் நிறுத்திப் பார்க்க வேண்டும்! அதே நேரத்தில், இத்தகைய, முழு நேரத் தொண்டர்கள், தலைவர்களற்ற பொழுதுபோக்குக்காரர்கள், பாடுபட்டு வளர்க்கும் போதே இந்த இயக்கத்தின் நிலை, அவர்கள், காங்கிரசார் கவலைப்படும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றால், ஒரு சிலராவது முழுநேரத் தொண்டராக, தலைவராக மாறிவிட்டால், இயக்கம், எங்கள் இயக்கம் என்ன நிலைமைக்கு உயர்ந்து விடும் என்பதை எண்ணிப் பார்த்தாரா? பார்ப்பாரா? என்று கேட்கிறேன்.

பொழுது போக்கும் நேரத்திலே பேசப்படும் பேச்சு, மக்களிடத்திலே எத்தகைய மனமாறுதலை உண்டாக்கியிருக்கிறது என்பதை யெண்ணிப் பாருங்கள்! போகிறபோக்கிலே நடத்திடும் நாடகங்கள் எத்தனை எழுச்சியை, எண்ணப் புரட்சியை நாட்டிலே ஏற்படுத்திட வித்தூன்றியுள்ளன என்பதைக் காணவேண்டும், காமராஜர்! பொழுதுபோக்கு, என்று சுருக்கமாக, ஆனால் கேலி கிண்டல் என்ற முறையிலே கூறிவிட்டார் காமராஜர்.

ஆனால் இதிலேதான் நமது நிலை, உண்மை நிலை, உள்ளநிலை, நமது இயக்கத்தின் உயர்நிலை—ஒப்பற்றநிலை

பொதிந்து கிடக்கிறது. 'பொழுதுபோக்கு' முறையிலே பேசப்படும் பேச்சுக்களைக் கேட்டிட ஏன் ஆயிரமாயிரம் மக்கள் கூடுகின்றனர்?

கூடும் மக்களின் எண்ணமும் எதிர்கால வாழ்வும் பாதையும் ஏற்றமும் பெரும் முன்னேற்றமும் அடைந்திட வழி வகுத்திடும் பேச்சுகளாகவே அமைகின்றனவே! அந்தப்பேச்சுகள்! அதைக்கண்டு ஆளவந்தார்கள் சீறிடும் அளவுக்கு அந்தப் பேச்சுகளிலே சிந்தனைச் செறிவு—அரசியலார் அகராதிப்படி புரட்சி முரசு கொட்டப்படுகிறதே! நினைத்துப்பார்க்க வேண்டும், காமராஜர், பொழுதுபோக்கு என்ருலும், பொதுவாழ்வு, புனித வாழ்வாகத்தான் பயன்படுகிறது, பயன்படுத்தபடுகிறது, எங்களால், எங்கள் இயக்கத்தவரால், இயக்கத்தால் இயக்கத்தின் இலட்சியத்தால், என்பதை!

ஆம்! பொழுது போக்கும் நேரத்தை, கிடைத்த ஓய்வு நேரத்தை, உழைத்து நைந்து அலுத்துப்போய், உட்கார்ந்து ஆயாசத்தை, அயர்வை, அலுப்பை போக்கிக் கொள்ள வேண்டிய நேரத்தை. ஊருக்கு உழைத்திடும் நேரமாக உறங்கிடும் மக்களைத் தட்டியெழுப்பிடப் பயன் படுத்துகிறேம் நாங்கள்! எங்கள் இயக்கம்—கட்சி ஏழை இயக்கம் பணம் ஏதும் இல்லாத கட்சி! எங்களிடையே பிர்லாக்கள், டாடாக்கள், டால்மியாக்கள் கிடையாது. நாங்கள் ஏழைகள்தான். நாங்கள் எங்கள் உழைப்பால் வாழ்வோர், உயிர் வாழ்வோர், உயர்வோர் மட்டுமல்ல, பிறரையும் வாழ்விக்கும் எண்ணமும் எழுச்சியும் உயர்த்தும் உள்ள உணர்வும் உறுதியும் படைத்தவர்கள்! என்பதால்தான் எங்களுக்குக் கிடைக்கும் ஓய்வையுங் கூட பொதுவாழ்வில் ஈடுபட்டு உழைப்பதிலேயே செல விடுகிறேம்.

மாதாமாதம் சம்பளம் கொடுத்துப் பலரைக் கட்சிக்காகப் பேசவோ, உழைக்கச் சொல்லவோ கட்சியில் நிதியில்லை என்பது மட்டுமல்ல, அத்தகைய நிதி கொடுத்து, வேலைவாங்கி, வளர்க்கப்பட வேண்டிய நிர்ணயமற்ற, நியாயமும் நீதியும் நேர்மையுமற்ற, நிரந்தரமுமற்ற, நிலையற்றகொள்கை கொள்கை கொண்ட கட்சியல்ல எங்கள் கட்சி! எங்கள் கட்சி—இயக்கம், மக்கள் கட்சி—மக்கள் இயக்கம்!

மக்களின் குறைகள், எந்த துறையிலேயும் நீங்கி, நீக்கப்பட்டு மக்கள் மக்களாகவே வாழ்ந்திடும் வழி வகைகளைக் கண்டு, காட்டி, மக்களை நல்ல வாழ்விற்கு, நாகரிக வாழ்விற்கு நடத்திச்செல்லும் நல்லறிவாளர்களைக் கொண்டது—எங்கள் இயக்கம். நல்லறிவாளர்கள் நாட்டின் நலத்திலே நாட்டங்கொண்டு உழைத்திடும் உத்தம உள்ளமும் உணர்வும் உறுதியும் படைத்த நல்லறிவாளர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் அத்தனைபேரும் எங்கள் இயக்கத்தின் தொண்டர்களே! கட்சியின் அங்கத்தினர்களே! இந்த நடமாடுங் கல்லூரியின் ஆசிரியர்களே! மாணவர்களே!

---

## நடமாடுங் கல்லூரி—நல்லறிவுக் கல்லூரி

நடமாடுங் கல்லூரி! நல்லறிவுக் கல்லூரி! நாட்டிலே நல்லறிவை, நல்லறி வுணர்ச்சியைப் பரப்பிடும் பணிபுரிந்திடும் கல்லூரி—நடமாடுங் கல்லூரி எங்கள் இயக்கம்!

•

நடமாடுங் கல்லூரி! பட்டிதொட்டி, நாடுநகரம் குழந்தை முதல் கிழவர் வரை மனித மனம் படைத்த மனிதரின் எண்ணங்களிலெல்லாம் நடைநொடி பாவனை அத்தனையிலும் ஊறிப் பதிந்து விட்ட கல்லூரி—நடமாடுங் கல்லூரி!

அறிவின் ஆரம்ப காலந்தொட்டு இன்றுவரை அழியாத அழிக்க முயன்றும் அழியாத, அழிக்கவே முடியாத அறிவுக் கல்லூரி—நல்லறிவுக் கல்லூரி—நடமாடுங் கல்லூரி!

நடமாடுங் கல்லூரி, மனித வாழ்வின் ஒவ்வொரு எண்ணத்திலும், எழுச்சியிலும் நடைமுறையிலும் நடமாடுகின்றது. நல்லறிவுப் போதனை, நல்லறி வுணர்ச்சி ஊக்கம் ஊட்டி, நல்லறிவுப் பாதையிலே நாட்டினரைச் செலுத்தி, நல்ல வாழ்வு—நாகரிக வாழ்வு வாழ்ந்திடத் துணைபுரிகிறது—நடமாடுங் கல்லூரி!

மனிதர் மனிதராக வாழ—மனிதர் மிருகங்களின் நாம் வேறுபட்டு, கொடுமைகளைக்களைந்தெறிந்து, அன்பும் அருளும் அறிவும் ஆராய்ச்சியும் பெற்றுப் புது வாழ்வு—பொதுவாழ்வு வாழ வழிகாட்டுகிறது—எங்கள் நடமாடுங் கல்லூரி!

•

நடமாடுங் கோயில்—நடமாடுந் தெய்வம் என்றெல்லாம் பேசி, கேட்டு, பக்திப் பரவசத்தால் ஆடிப்

பாடி வந்தவர்கட்கெல்லாம் நடமாடுங் கல்லூரி என்பது வேடிக்கையாகத்தான் இருக்கும்.

நடமாடுங் கல்லூரி—நடமாடுவதை—நாட்டு மக்களின் கண்களிலும் கருத்திலும், ஏன் வாழ்வின் ஒவ்வொரு எழுச்சிலும் பேச்சிலும் ஒவ்வொரு துறையிலும் நடமாடி வருவன உணரமுடியும் ஊன்றிக் கவனித்தால்!

மனிதன் மனிதத் தன்மைக்குப் புறம்பான செயல்களைப் புரிந்திடும் ஒவ்வொரு நேரத்திலும், மனிதனது அறிவு—தனனைத்தான் தட்டிக் கேட்டிடுகிறது 'அடாத செயலப்பா—அடாத வேலையப்பா—தகாது—தீது' என்று அறிவுறித்துகிறதே—மனிதன் தனது தவறைத் தானே உணருகிறனே—அந்த ஒரு வினடி—அந்த ஒரு கணம்—ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தான் ஒவ்வொரு கல்லூரியாக, நடமாடுங் கல்லூரியாக, அதன் ஆசிரியராக அதே நேரத்தில் அதன் மாணவனுமாக மாறத்தானே மாறுகிருன்? இல்லையென்று கூற முடியுமா?

அறிவு—நல்லறிவு—நல்லறிவுக் கல்லூரி-நடமாடுங் கல்லூரி, உலகில் தோன்றியது இன்று நேற்றல்ல—மனித இனம் சிந்திக்கத் தொடங்கிய நாள் முதலாகவே உலகில் மனிதரிடையே நடமாடித்தான் இருக்கிறது! மனிதன் காடுகளிலும் மேடுகளிலும், மலைகளிலும் மரஞ் செடிகொடிகளிடையே காட்டு மிராண்டித் தனமாக, தனித்தனியே திரிந்து அலைந்து, இலைகளையும் தழைகளையுமே ஆடைகளாகப் பூண்டு, கிடைத்த காய், கனி, கிழங்குகளைப் புசித்து, சிலபல நேரங்களில், தற்காப்புக்காக எப்படியோ கொன்றுவிட்ட மிருகங்களின் பச்சை இறைச்சியையுமே புசித்து வாங்ழ்தது, இருட்டியதால்,

எங்கெங்கே இருக்கிறார்களோ அங்கங்கேயே தங்கிடும் நிலையற்ற வாழ்வு வாழ்ந்து வந்ததில் நாளாக நாளாக மாறத்தொடங்கியது! மனிதன் மாறத் தொடங்கினான் சிந்திக்கத் தொடங்கிய காரணத்தால்!

மனிதன் இயற்கையின் வளப்பைக் கண்டு மகிழ்ந்தான், ஆரம்ப காலத்தில்! ஆரம்ப மனிதன் இயற்கை வனப்பைக் கண்டு மகிழ்ந்த அதே நேரத்தில். இயற்கையின் சக்தியைக் கண்டு மருண்டான், மனக்கிலி கொண்டான்! மகிழ்ந்தான்—மருண்டான் மனக்கிலி கொண்டான் மனிதன். ஆரம்ப கால மனித வாழ்வு அப்படித்தானே இருந்தது?

வளமான காய்களையும் கனிகளையும், கிழங்குகளையும், அருமையான சோலைகளையும், தெள்ளிய நீரையும் கண்டு உண்டு களித்தபோது. இயற்கையின் வளத்தையும் வனப்பையும் எண்ணி மனிதன் மகிழ்ந்தான்! அதே நேரத்தில், முட்புதர்களையும், கரை புரண்டோடும் காட்டாறுகளையும், கடக்க முடியாத மலைகளையும், மடுக்களையும், அடர்ந்து நுழைய முடியாது வளர்ந்துள்ள காடுகளையும், அதிலே பற்றி யெரியும் தீச்சுடரையும், வீசும் காற்றை—அடிக்கும் புயலை, அலைமோதும் கடலைக் கண்ட போதெல்லாம் மனிதன் மருளாது, மனக்கிலி கொள்ளாது இருக்க முடியவில்லை!

இந்த இரு நிலைகளிலும் மனிதன் சிக்கித் தவித்த நேரத்திலே காட்டுவிலங்குகளுடன் வேறு போட்டி போட்டுத் தன்னைத்தான் பாதுக்காத்துகொள்ள வேண்டிய கட்டாயத்திற்கும் ஆளாக வேண்டியிருந்தது, ஆரம்ப மனித வாழ்வு!

இப்படிப் பட்ட நிலையற்ற காட்டு வாழ்வு நடத்திய மனித இனம், பகுத்தறிவு படைத்த மனித இனம், படிப்

படியாக சிந்தித்துச் சிந்தித்து, இயற்கையின் எழிலையும் வளத்தையும் வகைப்படுத்தி, வாழ்வுக் கேற்ற வழியில் பண்படுத்திப் பாடுபட்டு உழைத்து உன்னதமான உயரிய வாழ்வு இன்றைய உலகவாழ்வு—சமூகம் சமுதாயம் நாடுநகரம்—அரசாங்கம் என்ற நிலைகளையுடைய நாகரிக வாழ்வுக் கட்டத்திற்கு துளிர்த்துள்ளது!

சிந்தித்த காரணத்தால், ஏன்? என்ன? எதனுல் என்று எண்ணிப் பார்த்த காரணத்தால் மனித இனம், இயற்கையின் வளத்தைப் பயன் படுத்தியதுடன் இயற்கையின் சக்திகளைக் கண்டு மருளாது, மனக்கிலியும் அடைந்திடாது, மாருக, இயற்கையின் சக்திகளையே தனது வாழ்விற்கு துணைச்சக்தியாக மாற்றி, பயன்படுத்தக் கொள்ளும் வழியில் முன்னேற முடிந்தது என்பதை மறக்கவோ! மறைக்கவோ!! மறுக்கவோ!!! முடியாது!

அறிவு—ஆராய்ச்சி இவைகளைக்கொண்டு சமூகம் சமுதாயமாக திரண்ட மனிதரிடையே—மனித வாழ்வில், உலகின் பலப் பல பாகங்களிலும் அந்தந்த நாடுகளின் இயற்கை வளம், வசதி, தட்ப வெட்பம் ஆகியவற்றிற் கேற்ப பலவகையாக வாழ்க்கை முறைகளும். நடை உடைமொழி, நாகரிகங்கள் வளர்ந்து வந்தன.

உலகில் பல பல இனங்கள், இனங்களுக்கேற்ற பண்புகள், பழக்கங்கள் வழக்கங்கள-மொழிகள், கலைகள் கட்டுப்பாடுகள், அரசுகள்—அரசுமுறைகள்—கடவுள்கள்—கடவுள் வழிபாடுகள்—ஏற்பட்டு வந்தன! சிந்தனையின் ஆரம்ப காலத்திலே, மனிதர்கள் சிந்திக்கத் தெரிந்தவர்களைக் கண்டு மருண்டனர், முதலில். பின்னர் மக்கள் தலைவன் என்றும், மனிதனது வழிகாட்டியென்

றும், மகிமை பெற்றவன் முனிவன்—ஆண்டவன், அவதாரம் — ஞானி—அரசன்—ஆளப்பிறந்தவன்—என்றெல்லாம் போற்றத் தலைப்பட்டனர்.

சிந்திக்கத் தெரிந்து சிந்தனை சக்தி மூலம் இயற்கையின்விளைவுகளைப் புரிந்து நடந்தவர்கள்பிறரையும் நடத்திச்சென்றவர்கள், தம்முடனிருந்த மக்களின் மனதைக் கவர்ந்தனர். மக்களின் தலைவராக—மதகுருமார் என்றும் முனிவர்—தேவர் தேவதூதர்—அரசர் என்ற முறைகளிலே வளர்ந்தனர்—வம்ச பரம்பரை பரம்பரையாக இந்த நிலைமைகளைத் தமக்கே—தமது வழி வழி சந்திக்கே உரியதாகவும் ஆக்கிக் கொண்டனர்.

அறிவும் ஆராய்ச்சியும் பெற்று அதன் மூலம் பிறரைச் சுலபத்தில் தமது எண்ணப்படி யெல்லாம் ஆட்டிவைக்கத் தலைப்பட்டனர். மதம்—சாஸ்திரம்—சம்பிரதாயம்—க ட வு ள்—கடவுள் தூதர்—அ ர ச ன்—அரசன் கட்டளை இப்படிப் பலப்பல நிலைமைகள், நிர்ப்பந்தங்கள் சாதாரண மக்கள் மீது சுமத்தப்பட்டு விட்டது.

இந்த நிலையில், ஒரு சிலர், அறிவாளிகள்—ஆனால் நல்லறிவுப் பாதையிலே அறிவைப் பயன்படுத்திடும் பண்பாடு பெற்றவர்கள் மனிதருக்குள்ளேயுள்ள கண்மூடிக்கொள்கைகளையும் காட்டுத் தர்பார்களையும் மதமூட நம்பிக்கைகளையும் அறிவெனும் சம்மட்டிகொண்டு தாக்கித் தகர்த் தெரியத் தொடங்கினர்.

'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்று காட்டிய வழியிலே கண்மூடிச் சென்ற மனித சமுதாயம் தன்னை உணர்ந்து, தனது நிலையை, தன்னிடமுள்ள அறிவை—ஆராயுந்திறனை உணர்ந்து, தனக்குத்தானே சிந்தித்துச் செயலாற்றும் வண்ணம், மாற்றும் மகத்தான

ஆனால் மிக மிகச் சங்கடமான பணியிலே அந்த அறிவின் தூதர்கள், நல்லறிவுப் போதனைகளை மக்களின் எண்ணங்களிலே தூவி, மனித உள்ளங்களைத் திறந்து, மனிதனது சிந்தனைத் திறனைத் தட்டியெழுப்பி மனித வாழ்வு மேலும் மேலும் நல்லறிவுத் துறையிலே, மனிதர் அனைவரின் நலத்திற்கும், நல்வாழ்விற்கும் பயன்படுமாறு செய்தனர்.

சரித்திரகாலத்திற்கு முன்பிருந்து பலர், மனித இனம் மறந்துபோன பலர், இந்த நற்பணியை—நல்லறிவுப் போதனையை—நல்லறிவுக் கல்லூரியை நடத்தி வந்தனர்.

அன்றுதொட்டு இன்று வரை நல்லறிவுக் கல்லூரி நடமாடுங் கல்லூரியாக உலகெங்கும் நாடெங்கும்— அறிவின் தூதர்கள் மூலம் நிலவி வருகிறது—நடமாடி வருகிறது.

இத்தகைய அறிவின் தூதர்களின் வழி வந்தவர்கள் உலகின் எப் பகுதியிலும் எல்லாக் காலங்களிலும் தோன்றித் தொண்டு செய்து வந்துள்ளனர் !

சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸ், சிந்தித்த காரணத்திற்காக, பிறரையும் சிந்திக்கத் தூண்டியதற்காக, நஞ்சுதரப்பட்டார் என்பதும், அப்போதும் அவர் மனமகிழ்ச்சியோடு மாண்டார் என்பதும் சரித்திரங்கண்ட உண்மையாகும்.

நஞ்சு குடித்து, குடிக்கும்படி செய்யப்பட்டு மடிந்த சிந்தனையாளன் சாக்ரடீஸ் வகுத்த வழியும், போதித்த நல்லறிவுக் கருத்துக்களும் அவருடன் சேர்ந்து செத்தொழிந்திடவில்லை !

சாக்ரடீஸ் செய்த சேவை, புரிந்த தொண்டு, உலகிற்கு அளித்த நல்லுரைகள், நல்ல நல்ல கருத்துக்கள் அவருக்குபின், பெரிதும் மக்களிடையே பரவத்தான் செய்தன.

நல்லறிவு பெற்று, நல்லறிவுக் கல்லூரியாக—நடமாடுங் கல்லூரியாக விளங்கிய சாக்ரடீஸின் கொள்கையைப் பின்பற்றிப் பலர் சிந்தனைத் தெளிவும், ஆராய்ந்திடும் பண்பும் பெற்றவராய் அவரது தொண்டை—நல்லறிவுப்பணியைத் தொடர்ந்து நடத்தி வரத்தவரவில்லை.

தத்துவஞானி அரிஸ்டாடல், அரசியல் அறிஞன் பிளேட்டோ, ரூஸோ—வால்டேர்—கலிலியோ, இயேசு, புத்தர், முகம்மது நபி, உலகப் பெரியார் காந்தி முதலிய பலர் பல காலங்களிலும் நல்லறிவுக் கல்லூரியின் மாணவர்களாகி—நாளடைவில் அதன் ஆசிரியர்களாகவும் பேராசியர்களாகவும் விளங்கி—நாட்டிலே உலகிலே மேலும் மேலும் நல்லறிவை—நல்லறிவுக் கருத்துக்களைப் பரப்பி—பலரைத் தமது வழி நடத்திப் பண்படுத்திச் சென்றதைக் கண்டோம் — கேட்டோம்— பார்த்தோம் படித்தோம் — படிக்கிறோம் — படித்துக்கொண்டுதான் இருப்போம்.

நல்லறிவுக் கல்லூரி—நடமாடுங் கல்லூரி—நல்லெண்ணம் கொண்ட நல்லறிவாளர் உள்ளளவும் நடமாடியே தீரும் என்பது உறுதி !

இந்த நடமாடுங் கல்லூரி—நல்லறிவுக் கல்லூரியின் மாணவர்களாக, போதகாசிரியர்களாக—நல்லறிவை பரப்பி—நாட்டினரின் நல்வாழ்வுக்கான தொண்டில் ஈடுபடும் பணியில் பங்கு கொண்டு இதையே வாழ்வின்

முக்கிய இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்திடும் மக்களைக் கொண்டதே எங்கள் இயக்கம்.

எங்கள் இயக்கம் ஒரு நடமாடுங் கல்லூரி—நல்லறிவுக் கல்லூரி என்பதை மீண்டும் குறிப்பிடுகிறேன். நடமாடுங் கல்லூரியின்—நல்லறிவுக் கல்லூரியின் நடமாட்டம்—போதனைகள் எங்கெங்கும் எப்படியெப்படியெல்லாம் நடக்கவேண்டும் என்பதைக் கவனித்துப் பார்த்து அங்கெல்லாம் நடமாடுங் கல்லூரி நடமாடி—நாட்டினரின் நல்வாழ்வுக்கான நல்லறிவை யூட்டி, மக்களை மக்களாக வாழ்விக்கும் பெரும் பணியில் ஈடுபட்டாகவேண்டும்.

நடமாடுங் கல்லூரியின் முன்நிற்கும் வேலைகள் மகத்தானவை! குறிப்பாகத் தமிழ்நாட்டில்—திருநாட்டில்—திராவிட நாட்டில் மனிதவாழ்வின் எல்லாத்துறைகளிலும் நடமாடுங் கல்லூரி—நல்லறிவுக் கல்லூரி முழு அளவில் முனைந்து வேலை செய்தாக வேண்டியிருக்கிறது.

அப்போதுதான் தமிழரது வாழ்வு தன்னம்பிக்கை கொண்ட தன்மான வாழ்வாக விளங்கும், விளங்க முடியும்—விளங்க வைக்கவும் முடியும், என்பது திண்ணம்.

நடமாடும் கல்லூரி—நல்லறிவுக் கல்லூரி பணி புரிய வேண்டிய துறைகள், தமிழரது வாழ்விலே மிக மிக அதிகம்.

தமிழன் இன்று கண்டதையெல்லாம் கடவுளாக மதித்துக் கண்மூடித்தொழுது வருகிறான்.

ஒரு கடவுளல்ல, பலபல கடவுள்களைக் கொண்டு பலபல கோயில்கள், அதற்கான திருவிழாக்கள், கும்பா

பிஷேகங்கள், கொட்டுமுழக்கங்கள், வாகனவகையறுக்கள், தீர்த்தயாத்திரைகள் இன்னும் எதையெதையோ செய்த வண்ணம் இருக்கிறான்!

மதத் துறையிலும் சரி தமிழனுக்குத் தன்மானமளித்து தமிழனைத் தலை நிமிர்ந்து நடந்திடச் செய்யும் நிலையிலே முறையிலே தமிழன் கைக்கொண்டொழுகிடும் இந்து மதம் இருக்கவில்லையே.

தமிழன் பழக்கம் வழக்கம் பாவம் புண்ணியம், மோட்சம் நரகம் பக்தி பாராயணம் ஆண்டவன் வாக்கு, என்று பலபல குருட்டுக் கொள்கைகளைக் கைக்கொண்டு கண்மூடிவழக்கங்களுக்கெல்லாம் தலைவணங்கி தன் அறிவையும் ஆற்றலையும் உழைப்பையும் ஊக்கத்தையும் இழந்து வாடிவதங்கி வறுமையில் புரண்டு நெளிகிறான்.

வாழ்விலே வேதனை! தொழிலிலேபோதிய வருவாயற்ற வகையற்ற வரண்டநிலை! ஏன் பலருக்குத் தொழிலே கிடையாத, கிடைக்காத திண்டாட்ட நிலை!

தமிழனிடம் என்ன இல்லை, தமிழகத்திலே எந்த வளம் குறைந்துள்ளது, இத்தகைய இல்லாத, இழி நிலையிலே உழன்று, ஊசலாடிடும், உளுத்தவாழ்வு வாழ்ந்திட!

யோசித்துப்பாருங்கள்! தமிழனிடம் சிந்தனை, சீர் தூக்கிப் பார்த்திடும் சக்தி—அறிவு—ஆராய்ச்சி மங்கி-மடிந்து மறைந்து கிடக்கிறது என்பதன்றி வேறென்ன காரணம்? கூறுங்கள்!

தமிழன் காலவேகத்தோடு ஓட்டி, வளர்ந்து கருத்து முன்னேற்றம் பெறவில்லை.

ஆம்! காலவேகம்! காலம் செய்திடும் மகத்தான மாறுதல்கள் மனிதவாழ்வில் பூத்துக் குலுங்கிடும் புத்துலக சாதனைகள் - சாதனங்கள் - புது வாழ்வுக்கருத்துக்கள், விஞ்ஞான வளர்ச்சியின் விளைவால் மனிதன் பெற்றுள்ள தன்னம்பிக்கை, ஆகியவற்றுடன், தமிழன் தனது புறவாழ்வை மட்டுமே ஓரளவு ஒட்டி முன்னேறியுள்ளானே தவிர, அக வாழ்விலே ஆயிரமாண்டுகளுக்கும் அப்பாலேதான் உழன்று கொண்டு தவிக்கிறான்.

தமிழரிலே, பெரும்பாலோர் இத்தகைய இருவேறு நிலைகளிலே, பழமைக்கும் புதுமைக்கு மிடையே ஊசலாடி உணர்வற்று, உள்ள உரமுமிழந்து உளுத்துப் போகின்றனர் என்பதை யார்தான் மறுக்க முடியும்?

தமிழரது எண்ணத்திலே பழமை பலப்பல துறைகளினும் ஊறிப்பதிந்து உறைந்துவிட்டிருக்கிறது!

தமிழன் எதற்கும் சகுனம், சாஸ்திரம், சம்பிரதாயம், தலைவிதி அவனிட்ட கட்டளை, கொடுத்து வைத்தது, அவ்வளவுதான் என்று பழமை பேசியும், பழக்கத்தை வழக்கத்தை துணைக்கழைத்தும், தமது வறுமைக்கும், வளமற்று வரண்டவாழ்க்கைக்கும் முன்னுள் பாவமென்றும், ஆண்டவன் அளித்தது அவ்வளவுதானென்றும், தம்மைத்தாமே நொந்து கொண்டு, நைந்த வாழ்வு வாழ்வதிலும் ஓர்வித திருப்தி கொண்டு, நிர்ப்பந்தத்தால், அறிவுக்கு ஒப்பாத கருத்துக்களின் ஆணைக்கு அவசியமற்று ஆனால் அஞ்சி நடந்திடுவதால் ஏதோ ஓர்வித திருப்திகொண்டு வா ழ் கின் றன ரே தவிர வேறென்ன?

தலைவிதி—ஆண்டவன் கட்டளை—சாஸ்திரம்—சம்பிரதாயம்—மேலுலக வாழ்வு என்ற கற்பனைக் கருத்துக்களை, அறிவிற்கும்—ஆராய்ச்சி அறிவியல் வாழ்விற்கும்-

விஞ்ஞானவளர்ச்சிக்கும் முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டு வாழ்ந்திடும் மக்களின் மனவளத்தை மாற்றிப் பண்படுத்தி, பகுத்தறிவுள்ள மக்களாக மாற்றி யமைத்திட வேண்டாமா ?

நடமாடுங் கல்லூரியின் முதற்பணி—மக்களின் மனவளத்தைப் பண்படுத்துவதுதான்.

மக்கள், இயற்கையின் விளைவுகளை, வசதிகளை, சக்திகளை தமது அறிவின் துணைகொண்டு ஆராய்ச்சித்திறனைப் பயன்படுத்தி, பகுத்தறிவால் பண்படுத்தி. நல்லவாழ்வு, நாகரிகவாழ்வு வாழ்ந்திடும் வழியும் வகையும் பெற மனிதர் தன்னம்பிக்கை கொண்டிடும் மனநிலையைப் பெற்றாக வேண்டும்.

இதற்கான அறிவுப் பிரச்சாரம் நடத்தப்படுகிறது, எங்கள் இயக்கத்தால்—நடமாடுங் கல்லூரியால்.

மக்களாகப் பிறந்து அனைவரும் சமம். பிறப்பால் பேதமேதுமில்லை என்ற பொதுஉரிமைத் தத்துவத்தைப் போதித்துவந்த பல்பல அறிவின் தூதர்களின் போதனையைத் தொடர்ந்து நாங்கள் செய்து வருகிறோம்.

மக்களின் மனவேற்றுமைக்கும், மீளா ஜாதித் தொல்லைக்கும் அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து, அவைகளை அகற்றப் பலவழிகளிலும் பாடுபடுகிது, எங்கள் இயக்கம்.

ஜாதிகளை ஆண்டவனே ஏற்படுத்தினர் என்று மக்களிடையே, வேதம், ஆகமம் இதிகாசம், புராணம், பாரதம், பாகவதம் ஆகியவற்றின் மூலம் பரம்பரை பரம்பரையாக ஊறிப்பரவியுள்ள எண்ணத்தை, விடாப்பிடிக்

கொள்கையைப் பகுத்தறிவுப் பிரசாரத்தின்மூலம், தகர்த் தெரிந்து வருகிறோம் என்பதை மறுக்க முடியாது!

ஜாதிகள்—அன்புருவான அருளுருவான—அறிவுருவான ஆண்டவனால் உண்டாக்கப்படுமா?

அன்பும் அருளும் அறிவும் ஒருருவான எம்பெருமானுக்குக் கோயில்கள் ஏன்? கும்பாபிஷேஷங்கள் ஏன்? ஆண்டவனுக்கும் பக்தர்கட்கும் இடையே தரகர்தான் ஏன்? ஏன்?

இத்தகைய அறிவுக் கேள்விகளை மக்களிடையே எங்கள் நடமாடுங் கல்லூரி எழுப்பி, மக்களின் சிந்தனையைக் கிளறி விடுகிறது, நாடெங்கும்.

எங்கள் எழுத்து, பேச்சு, அத்தனையும் அறிவுக் கொள்கைக்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

எங்களால் எழுதப்படும் நாடகம், சினிமா யாவற்றிலும் அறிவுமணம் வீசாமல் இருக்கவில்லை என்பதும் நாடறிந்த உண்மைதான்!

பழமையின் காடியிலே ஊறிப்போன மக்களின் மனம், எண்ணம் சுலபத்திலே, பகுத்தறிவுப் பாதைக்குத் திரும்பாது தான்!

மேலும் பழமையினால், சமூகத்திலும் சமுதாயத்திலும் ஏற்றம் பெற்றுள்ள மேல் ஜாதிக்காரர்களும், புத்தறிவுப் பெற்றுவரும் நடமாடுங் கல்லூரியின் பேச்சுக்கும் எழுத்திற்கும், போதனைகட்கும் மக்களை செவிகொடாது போகவேண்டும் என்று எண்ணி எங்களை 'நாத்தீகர்கள்' என்று தூற்றினர்—தூற்றுகின்றனர்!

எங்களுக்கு எதிராக, பழமைப் பிரசாரம் பலமாக இப்போது நடைபெற்றுவருகிறது, நாடெங்கும்!

எதிர்ப்பு, ஏளனம், ஏசல், பூசல், தூற்றுதல், பாணங்கள், கேலிமொழிகள், கிண்டல் வினைக்கள், பழமை, மதம் பக்தியும், பற்றும் கொண்டு போதை யேறிய மக்களின் கோபாவேசம் ஆகிய அத்தனையையும் அன்புமுறையில், அறிவையே ஆயுதமாகக் கொண்டு தாங்கி, எதிர் நீச்சலடித்து, எதிர்ப்பிலே வளரும் இயக்கம், எங்கள் இயக்கம்!

சாதாரண மக்களிடையே நடமாடும் அறிவியக்கம்-எங்கள் இயக்கம்.

அறிவுதாகங் கொண்ட மக்களிடையே, அண்ணன் தம்பிக்கும், தம்பி அண்ணனுக்கும், மகன் தந்தைக்கும், தந்தைமகனுக்கும் இன்னும் யார்யார் வேண்டுமானாலும், வீடு, வெளி, கூட்டம், தோப்பு, துரவு, வயல், தொழிற் சாலை எங்கும், எப்பெழுதும் வேண்டுமானாலும் எங்கள் கல்லூரி நடைபெறும்—நடைபெறுகிறது என்பதை உணரவேண்டும்.

நல்லறிவு பரப்பிடும் இந்த இயக்கத்தை-நடமாடுங் கல்லூரியை இடித்துவிட, முடிவிட, பழமை விரும்பிகள்—சுயநலமிகள் — ஆதிக்ககாரர்கள்—சுரண்டி வாழ்வோர் பலப்பலவிதங்களிலே முயன்று வருகின்றனர்.

எத்தகைய முயற்சிக்கும் முறிந்து போகக்கூடிய தல்ல, இந்த நடமாடுங் கல்லூரி!

நல்லறிவும் — நல்லெண்ணமுங்கொண்ட மனித மனம் படைத்த பொதுநலத்தொண்டர்கள் மட்டுமல்ல,

பொழுது போக்காக உழைப்பவர்கள் கூட எப்பொழுதும் பணிபுரியும் முறையிலே எங்கள் இயக்கம் அமைந்துள்ளது.

இதனை யழிக்க எவராலும், எத்தகைய சக்தியாலும், எப்போதும் முடியவே முடியாது, என்பது மிகமிக உறுதி !

தனிப்பட்ட சிலரது வாழ்விலே குறுக்கிட்டுக் கோலாகலம் விளைவித்து, தனிமனிதரை வேண்டுமானால் துன்புறுத்தலாம்.

ஒருசில உடையார்பாளையம் வேலாயுதங்களைப் பிணமாக்கி, மரக்கிளையிலே தொங்கவிடலாம்.

மஜீத்--பாண்டியன் போன்றார் படுகொலைசெய்யப் படலாம்.

வேறு என்னமுடியும்? அன்றுதொட்டு, இன்றுவரை, உலக வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால், அறிவின் தூதர்கள் ஒருவர் ஒருவராக அழிக்கப்பட்டாலும் கொடுமைக்கு—கோர காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைகட்கு ஆளாக்கப்பட்டாலும், அவர்கள்—அந்த அறிவின் தூதர்கள் தான் மாண்டனரே தவிர, அவரது எண்ணங்கள், மக்களின் நல்வாழ்வுக்கான கருத்துக்கள் மறைவில்லை—மாறாக, மேலும் மேலும் பலபல அறிஞரை—அறிவின் தூதர்களை நாட்டுக்கு உலகு தந்தன என்பதைக் காணலாம்.

கடவுள், மதம்—ஜாதி பேதம், பழக்கவழக்கம் ஆகிய துறைகளிலே மாறுதல்—அடைந்து மறுமலர்ச்சி பெற்று, 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்று மனவளத்

துடனும், மனவலிமையுடனும் தன்னம்பிக்கைகொண்டவராக—தன்மானமிக்கவராகதமிழர்—திராவிடர் வாழ வேண்டும்.

இந்த நல்லநிலைமைக்கு நாட்டு மக்களைப் பண்படுத்தி பக்குவப்படுத்தித் தருவதுயார்? நல்லதொண்டு செய்து வருவது யார்?—எங்கள் நடமாடுங் கல்லூரி!

தமிழன் எண்ணத்துறையிலே பண்பட்டுவரும் அதே நேரத்தில், தன்னையும், தனது இனத்தையும், தன் நாட்டையும், தனது நாட்டின் இழிநிலையையும் அடிமை நிலையையும் உணர்ந்து அதற்கான எல்லாவித தியாகத்தையும் செய்தாக வேண்டும்.

நாம் யார்? நமதுநாடு எது? என்பதை உணர வேண்டும். நடமாடுங் கல்லூரியின் முக்கியபணிகளிலே நமது நாட்டை நாமே ஆண்டிட வேண்டும்—அதற்கான பணிபுரிந்தாக வேண்டும் என்பது மிகமிக முக்கியமாகும்.

நாம் திராவிடர்—நமது நாடு—இன்றைய சென்னை மாகாணம்—திராவிட நாட்டை திராவிடரே ஆளவேண்டும். திராவிடம் வடவரின் ஆட்சியிலே சிக்கி, ஏக இந்தியா என்ற பிணைப்பிலே அடங்கி தனது ஆற்றலையும், பொருளையும் இழந்து—திராவிடரின் நல் வாழ்வுக்குப் பயன்படமுடியாமல் தவித்திடும் அவல நிலையைப் போக்கியாக வேண்டும்.

அதற்கான பயிற்சி, போர்ப்பணி—பகுத்தறிப் பாதையை-நடமாடுங்கல்லூரியின் பேராசிரியர் அறிஞர் அண்ணா காட்டுகிறார்—அதன்வழி — **அண்ணா** காட்டும் அறப்போர் வழி நடப்போம்—வாரீர்!

# அண்ணா காட்டும் அறப்போர்

ஆதிக்க ஆசைகொண்டு, போர்வெறி தலைக்கேறி, தரணி புகழ் திராவிடத்தின் மீது படையெடுக்கத் துணிந்து, மௌரியர்களின் இருதோள்களாக நின்று, வஞ்சகமே உருக்கொண்டு. நஞ்சுத்தன்மையே அழகென நினைத்து, பலபல பார் மன்னர்களை மண்டியிட வைத்த ஆரிய சாணக்கியனின் தூண்டுதலின் பேரில் திராவிட எல்லைக்குள் நுழைய முயன்ற மூடர்கள்—வீரமில்லாத வீணர்கள்—வடுகர், கோசர் என்பவர்களை யுத்த களத்திலே கொட்டும் குருதியைக் கண்டு குலைநடுங்காமல் தாக்கி, அப்பேயர்களின் படைகளை பஞ்சு போலத் தூள் தூளாகச் சிதறடித்து வெற்றிவாகைச் சூடிய இளஞ்சேட் சென்னியின் செந்நீரில் உதித்த வீரத்திராவிடனே!

கன்னித் திராவிடத்தின் மீது அகந்தை கொண்டு, ஆணவத்தோடு இழுக்கு மொழிபேசி அழுக்குப் பழி சுமத்திய வட நாட்டு மடையர்—கயவர்—இருவர்—கனக விசயர்களின் தலையிலே கல்லைச் சுமத்தி கற்புக்கரசி கண்ணகிக்குக் கல் நாட்டிய தன்மானத் திராவிடன் சேரன் செங்குட்டுவனின் சந்ததியிலே பிறந்த சூரத் திராவிடனே!

காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையில் கடற் படைகட்டி, நாவலந்தீவுகளின் மீது படையெடுத்து, திராவிடத்தின் வீரப் பெயரையும், தீரச் செய்கையையும் பொறித்த திராவிடக் கொடியைத் தலை நிமிர்ந்து படபட வென்று பறக்கவிட்ட கரிகாலனின் மரபிலே தோன்றிய தீரத் திராவிடனே!

அக்கினியாஸ்திர மென்றும் கன்னியாஸ்திரமென்றும் பலபல புளுகி, பொய்யே உருவாக அமைந்து,

வஞ்சகமே உயிராக விளங்கி, சதிச் செயல்களே வீரமென நினைத்து, புற்களை வீரவாளாகக் கருதி, இறுமாப்புக் கொண்டு அச்சமில்லாமல் ஆணவமாக அரசாண்ட ஆரியப் படையை இரத்த ஆறாக ஓட்டி, அவர்களின் தலையிழந்த உடல்களைக் கழுகுகளுக்கும் நரிகளுக்கும் இரையிட்டு, உடலிழந்தத் தலைகளை இடது காலால் பந்தாடி வீரப் பரணிபாடி வீரமாலை அணிந்த ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் குலத்திலே பூத்திட்ட மறத் திராவிடனே !

அழைப்பு ! கால்முடக்கப்பட்டு, கையொடிக்கப் பட்டு, கழுத்துவளைக்கப்பட்டு, வாயடைபட்டு, உயிருக்கு மன்றாடும் திராவிடத்தின் உள்ளத்திலிருந்து பீறிட்டெழும் அவசர அழைப்பு ! ஏகாதிப்பத்தியத்தின் இருட்டறையில் தள்ளி, 'இந்தியரனைவரும் ஒன்றே'யென்றும் ஈட்டியை மிடுக்குடன் வயிற்றிலே பாய்ச்சி, 'வகுப்புத் துவேஷம்' என்னும் இரும்புக் கரங்களால் குரல் வளையைப் பிடித்து, பிதுங்கும் கண்களிலே அடக்குமுறை அம்புகளை எய்து மூச்சுவிடமுடியாமல் குற்றுயிருடனிருக்கும் உன் தாயகத்தின் அபய அழைப்பு !

அன்று ஆகாயத்தை மோதும் மாட மாளிகைகளிலே, விண்ணை முட்டும் கூட கோபுரங்களிலே, தன் மானத்தை உயிரெனப் போற்றி சுயமரியதையை உடலெனக் கருதி தலைநிமிர்ந்து வாழ்ந்த வீரத் திராவிடன், இன்று அன்னிய ஆதிக்கப் பேய்களால் சூழப்பட்டு, அவைகளுடைய அடக்குமுறைப்படைகளால் முற்றுகையிடப்பட்டு, 'எல்லோரும் இந்தியரே' என்றும் வஞ்சக இரும்புத் திரையிட்டு வடவர்களால் உன் செல்வம் பகிரங்கமாகச் சூறையாடபட்டு அவதிப்படும் உன் தாய் நாட்டின் மகத்தான அழைப்பு !

கற்களைக் கண்டு கடவுள்களெனக் கொண்டு, பொய்களைக் கேட்டு வேதங்களென நினைத்து, ஆரியம் விரித்த மாய வலையில்—சதிகார பார்ப்பனீயம் தூவும் வஞ்சகத்தூபப் பொடியில் —பெற்றிருந்த தன் மானத்தையிழந்து, கொண்டிருந்த பகுத்தறிவைப் பறக் கடித்து, அடைந்திருந்த நாணத்தை நசுக்கிவிட்டு, போற் றியிருந்த வீரத்தை விரட்டி, ஆரியமிட்ட கட்டளையே சட்டமாக நினைத்து, அது சொன்ன நஞ்சு கலந்த வாக் கையே வேதவாக்காகக் கருதி, இன்று அனாதையாய், திக்கற்ற பேதையாய், சீரழிந்து பொலிவிழந்து காணும் உன் திராவிடத்தின் உன்னதமான அழைப்பு!

ஏன்? உயிர் போகும் நிலையில் உன்னை ஈன்றெடுத் தத் தாயகம் உன் உள்ளத்தைத் தொடும்படி வாய்விட்ட ழைக்கிறது! ஏன்? மரணப்பிடியில் சிக்குண்டு உயிரி ழக்கும் நிலையில் உன்னைப் பெற்றெடுத்த தாயகம் உன் மனதில் படும்படி இரத்தக் கண்ணீர் விட்டு அழைக் கிறது! எங்கே அழைக்கிறது? எதற்காக அழைக்கிறது?

அன்று இமயத்தில் வீரக் கல் நாட்டித் திராவிடக் கொடியைப் பறக்கவிட்ட திராவிடம் இன்று வட நாட் டுக் கொடிக்கு மண்டியிட்டு மடியேந்திப் பிழைக்கிறதே! உனக்குத் தன் மானமில்லையா? அன்று காட்டுக் கூச்சல் போட்டு மந்திரம் பல சொல்லி போர்க்கோலம் பூண்ட வடநாட்டுப் படையைப் பிணக்கோலம் பூணச் செய்த திராவிடம் இன்று வட நாட்டு அரசாட்சிக் காலடியில் மிதியுண்டு உயிர்போகிறதெனத் துடிக்கிறதே! உனக்கு வீரமில்லையா? அன்று தரணியிலே புகழ்பெற்று, மக் களால் புகழ் பரணி பாடப்பட்டு கடல் கடந்து பொரு ளீட்டிய திராவிடம் இன்று வடநாட்டு வாணிகப் பதர் களின் பண்டங்களுக்குப் பரிதவிக்கிறதே! உனக்கு நாண மில்லையா?

இல்லை! உனக்கு உடம்பிலே அணுவளவும் நாண மில்லை! இருந்திருந்தால் நீ வடவர் அனுப்பும் பண்டங் களுக்குரிய சந்தையாய் இருப்பாயா? உனக்குத் தேகத் தில் கொஞ்சமேனும் தன்மானமில்லை! இருந்திருந்தால் நீ வடர் வாயசைப்புக்கு அஞ்சிநடுங்கும் கோழைத் திரா விடனுக இருப்பாயா? உனக்கு உள்ளத்திலே சிறிதள வும் வீரமில்லையா! இருந்திருந்தால் நீ வடவர் இடும் கட்டளையைச் சிரமேற் கொண்டு பணியாற்றுவாயா?

தரணியெங்கும் தன்மானத்தில் தலைசிறந்து, வீரத் தின் உறைவிடமாய் நாணத்தின் நிறைவிடமாய், வழிவழி அரசாண்டு காலத்தின் கொடுமையால் மளமளவென மாண்டு திராவிடத்தின் பொன்னிற மண்ணிலே புதை யுண்டு போன உன் பரம்பரையின் வீரத்தை நீ விலைக்கு விற்றுவிட்டாய்! பணத்திற்கும், பதவிக்கும் நாணத்தை இறையாக்கிவிட்டாய்! அதற்காகத் தன்மானத்தைத் தடி கொண்டுத் தாக்கிவிட்டாய்! உன்னுல் உன்னைப் பெற் றெடுத்த திராவிடம் அடைந்த இலாபமென்ன? உன்னுல் உன்னை ஈன்றெடுத்தத் திராவிடம் பெற்ற சிறப்பென்ன? உன்னுல் உன்னைத் தாலாட்டி, சீராட்டி வளர்த்த திரா விடம் அடைந்த புகழ் என்ன?

நாக்கைத் தொங்க விட்டுக் காத்திருக்கும் நாய் களுக்கு வீசும் எலும்புத் துண்டுகளைப் போல, உனக்கு வடநாட்டான் வீசும் சிறு பதவிகளுக்காக உன் தன் மானத்தை, வீரத்தை, நாணத்தை இழந்துவிட்டாய்— குழி தோண்டிப்புதைத்து விட்டதுமல்லாமல் உன் குருதி யிலே பிறந்த மற்ஞெரு திராவிடன், "இந்தச் சகிக்க முடியாதக் காட்சி! பார்க்கச் சகிக்க முடியவில்லை இந்த வேம்பான காட்சி! வீரத்தில் குவலயம் புகழ் பெற்ற நாடு உன் தாய் நாடு, வீரமென்பதையறியா வட நாட் டானின் ஆட்சியிலே—ஆளத்தகுதியில்லா ஆணவக்காரர் களின் அடக்குமுறை ஆட்சியிலே—அடிமைப்பட்டு அடி

யோடு அழிந்துப் போய்க் கொண்டிருக்கும் வேதனையான காட்சியை—உயிரைக் கொல்லும் இக் கொடுமையான காட்சியை—நீ கண்டு களிப்புரை கூறுவதா? கழுதையின் ஆட்சியினுல் குதிரை குலை நடுங்கிச் சாவதா?'' என்று கேட்கக் கூடாதா?''

“தான் பிறந்த தாயகத்தில் பசியால் பதைபதைப் புற்றுத் திராவிடன் நடைப் பாதையிலே இறப்பதா? அதே நேரத்தில் அவனைக் கண்டு எள்ளி நகையாடி, எச் சிலைத் துப்பி, சிரிப்பைச் சிந்தி ஏழடுக்கு மாளிகையிலே வட நாட்டான் திராவிடத்தின் செல்வத்தை உறிஞ்சிக் கொண்டு, உடலுக்கு உகந்த ஊர்வசிகளிடம் உவகை மொழி பேசி உன்னத வாழ்வு வாழ்வதா? ஈன்றெடுத்த திராவிடத்தில் விசை யொடிந்த திராவிடன் வாழவகை யற்று வாழ்வை இரண்டு முழம் கயிற்றிலே வதைத்துக் கொண்டிறப்பதா? அதே நேரத்தில் திராவிடனின் குருதியைக் குடித்து உடல் பெருத்து வட நாட்டான் முத்து பஞ்சணையிலே ஒய்யாரமாக அமர்ந்து தென்றல் காற்றை வாங்கிய வண்ணம் இல்லறத்து இனியாளோடு இன்ப மொழி பேசிக் கொண்டிருப்பதா? தங்கத்தை மங் கைகள் அறுவடை செய்த பொன்விளைந்த திராவிடத்தில் திராவிடன் உண்ண உணவில்லாமல், உடுக்க உடையில் லாமல், உயிர்துடிதுடித்துத் தூக்கிலே தொங்கி ஊஞ்ச லாடுவதா? அதே நேரத்தில் குருதியை வியர்வை நீரெ னக் கருதி உழைத்துக் கட்டிய கண்வரும் கட்டிடங் களில், தங்கத்தால் ஊஞ்சல் கட்டி, வைரத்தால் தலையணை செய்து, இரத்தினங்களால் உணவுகளைச் சமைத்து வயி ருர உண்டு உடலார உடையுடுத்தி ஆரணங்குகளின் முத் தப் பழங்களைச் சுவைத்து ஆனந்தமுடன் ஊஞ்சலாடிக் கொண்டிருப்பதா?

“பத்துமாதம் சுமந்துப் பெற்ற வைரக் கொடிக்குப் பால் கொடுக்க கதியற்று ஐந்து ரூபாய்க்கும், பத்து

ரூபாய்க்கும் கடைப்பொருளைப் போல விற்று வயிற்றைக் கழுவும் தாய் மார்களை திராவிடம் தோற்றுவிப்பதா? அதே நேரத்தில் திராவிடனின் உழைப்பை உறிஞ்சி வாழும் வடநாட்டான் தன் குழந்தைக்கு விதவிதமான பட்டுடைகளினுல் ஆடையலங்காரம் செய்து உள்ளம் குளிர்வதா? உள்ளத்தை ஊடுருவி உடலுக்குள் வேதனைப் புரையோடிப் போயிருக்கும் திராவிடத்தில் வேதனை மயமானக் காட்சிகள் எத்தனை, எத்தனை? உள்ளத்திற்கு உவகையைத் தேடியளிக்க உல்லாசக் காட்சிகளைக் காணப் பெற்ற திராவிடக் கண்கள், வறுமையிருட்டறையிலே அடைபட்டு அணுஅணுவாகத் திராவிடம் உயிரிழக்கும் கொடுமையான காட்சியைக் கண்டு இரத்தக் கண்ணீர் வடிக்கிறதே! இரத்த குழாய்களில் வீர இரத்தம் துடிக்கிறதே! பச்சை நரம்புகளில் தன்மான உணர்ச்சி பாய்கிறதே!

'' திராவிடன் இந் நாட்டிலே தலை நிமிர்ந்து சுந்தரத் தமிழல் இசையமுது கேட்டு, இன்பத்தை அள்ளிவீசும் தோணியிலே குளிர்ந்த நீரில் உல்லாசபவனி வந்து, கற்பை அணிகலனுகப் பெற்ற திராவிடப் பெண்மணியின் பக்கத்திலே அமர்ந்து இன்ப உரையாடல்களை உரையாட வேண்டியவன்; பசிப்பிணியினுல் பருவத்தையிழந்து, உடல் உருகி, எலும்புக் கூடாய், நடைப்பிணமாய் உலாவும் மனைவியைக் கண்டு மனம் வெதும்பி உலகவாழ்வின் மீது வெறுப்படைந்து. மண்ணுக்குள் உயிரில்லா உடலாகப் புதையுண்டு போகிருன். நம்பிய நங்கையை நட்டாற்றில் விடமுடியாதனுய் 'கள்ளன்' என்னும் குற்றத்தை சுமந்து சிறைக்குள் நுழைகிருன். கொலை செய்கிருன்—தூக்குமேடை ஏறுகிருன்! 'ஏன்?' என்று நீ எண்ணிப் பார்த்ததுண்டா? சிந்தித்ததுண்டா? அரசாண்ட தாயகம் அன்னியரின் இரும்புப்பிடியிலே அல்லல் படுகிறதே, எதற்காக என்று நீ கருதிய

துண்டா? கருத்திலே நாட்டம் கொண்ட துண்டா?'' என்று, வற்றியதொண்டையில் அடிவயிற்றைப் பிடித் துக் கொண்டு கேட்பவனைக் கண்டு, ஏ திராவிடனே! தன்மானம், வீரம், நாணயம், இவைகளை இழந்த திரா விடனே! நீ சொல்கிறாய்:—

"அவன் விஷமப் பிரசாரம் செய்கிறான். வக்கிர புத்தி கொண்ட வீணன் அவன்! வகுப்புவெறியன்; நம்பாதீர்கள் அவன் பேச்சை! பதவி வெறிபிடித்தவன்; பித்தன்; கருத்திழந்து கதறுகிறான்!" என்று பாமரக் குடிகளிடம் கனைக்கிறாய். உன் குரலைக் கழுதைக்கு ஒப் பிட்டுப் பார்த்துக் கொள்கிறாய்!

தன்மானத்தின் மீது உனக்கு மதிப்பில்லாவிட்டால் நாணத்தின்மீது உனக்கு நாட்டமில்லாவிட்டால் பெற் றெடுத்த தாயகத்திற்கு நீ செய்த வஞ்சகத்தைக் கருதிப் பார்! ஈன்றெடுத்த திராவிடத்திற்கு நீ புரிந்தத் துரோ கத்தை எண்ணிப்பார்! எண்ணிக்கூடப்பார்க்காதே! உன் கூடப்பிறந்தவன்—உன் நாட்டான்—இன்பமாக வாழ, உன் தாயகம் தலை நிமிர்ந்து வாழ, உரிமையுடன் வாழ முயற்சிக்கும் முயற்சியில் நீ தீ மூட்டாதே! வாள் வீசாதே! வாய்ச் சொல்லும் சொல்லாதே!

திராவிடா! என்னருமைத் திராவிடா! கடாரம் கொண்ட கன்னித் திராவிடா! இன்பதிசை தெரியாமல் துன்பப்பாதையில் உடல்துவளும் அனுதைத் திராவிடா! பதவிமோகத்தால் உன் இன்பவாழ்வை—உன் தாயகத் தின் நல் வாழ்வை—வதைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு உலாவும் உலுத்தர்களைக்கண்டு ஏங்காதே! அஞ்சாதே! எழுந்து நில்! எழுந்து நில்; விசையுடன் நட; தலை நிமிர்ந்து பார்! உன் கண்களிலே தோன்றும் அறப்போர்—நம் அண்ணு காட்டும் அறப்போர்—இருக் கிறது உன் நளிந்த காலை நிமிர்த்தி வைக்க-உன் வளைந்த இடுப்பை சரிபடுத்த!

அஞ்சல் நிலையங்களை தகதக வெனக் கொளுத்திக் கொழுந்து விட்டெரியும் தீயைக் கண்டு ஆனந்தமடைவது, தண்டவாளங்களைப் பெயர்த்துத் தடதடவென ஓடிவரும் ரயிலைக் கவிழ்த்து ஏதுமறியா நிரபராதிகளின் உயிரையும். குருதியையும் குடித்துச் சுவைத்துக் களிப்பது, தந்திக்கம்பிகளை அறுப்பது அல்ல அண்ணு காட்டும் அறப்போர்!

கட்டுப் பாட்டைக் கேடயமாகக் கருதி, ஒழுக்கத்தை வாள் என நினைத்து, நேர்மையை ஈட்டியாகக் கொண்டு, நியாயத்தை கவசமாக அணிந்து, 'திராவிடநாடு திராவிடர்க்கே! அரசாண்ட இனம் மீண்டும் அரசாள்வதற்கே அறப்போர்!'' என்ற திராவிட முரசை வான் அதிரக் கொட்டி, அணி அணியாக அலைபோல நின்று, 'வடநாட்டானே வெளியேறு' என்ற இதய பேரிகையை முழக்குவதே அண்ணுகாட்டும் அறப்போர்!

"எழில் மிக்க திராவிடம் உங்கள் உழைப்பைக் கேட்கிறது—உங்களுடைய வீரத்தால்தான் தன் தளைகள் ஒடிந்துபடும் என்று நம்புகிறது. அந்தத் திருப்பணிக்கே, உங்கள் ஆற்றல் பயன்படட்டும்—வேறுதிக்கு நோக்க வேண்டாம்''.

நாட்டிலே பரவியுள்ள நச்சுக் கருத்துகளை வேரோடு களைந் தெறிய 'ஆரியமாயை என்னும் புத்தகத்தை எழுதியதினுல், எதேச்சத்காரத்தின் அடக்குமுறை வெறிக்குப் பலியாகி, உரிவைநாட்டிலே இன்ப வாழ்வை வைத்து திராவிடத்தின் நலனை உயிராக மதித்து திருச்சி சிறையிலே அடைப்பட்டு, பண்ணிரண்டாம் நாள் சர்காருக்கு தெளிவு ஏற்பட்டு விடுதலை யடைந்த அண்ணுவின் கட்டளையை—அவர் சிறை புகுந்த போது உனக்களித்த பொன் மொழியை செயலிலே காட்டி திராவிடத்திற்குப் புத்துயிரளிப்பதே அண்ணு காட்டும் அறப்போர்!

வட நாட்டானின் சுரண்டலுக்கும், அவனுடைய ஏகாதிபதித்ய பாசக் கயிற்றுக்கும், அதற்குத் துணையாக இருக்கும் 'எல்லோரும் இந்தியர்' என்னும் வஞ்சகத் திரையைக் கிழிப்பதற்கும், 'ஆரிய மாயையினல் ஆண்டான், அடிமை, ஜாதி என்னும் கோரக் கொள்கைகள், நஞ்சுக்கலந்த வார்த்தைகளைத் தீயிலிட்டுப் பொசுக்குவதற்கும், 'திராவிட இரத்தத்தை உறிஞ்சும் அன்னியர்களே! தாயகத்தை விட்டு வெளியேறுங்கள்!'' என்ற முரசை விண்ணதிரக் கொட்டுவதுமே அண்ணு காட்டும் அறப் போர்!

திரண்டெழுந்த மக்களின் உள்ளத்தில், அணைகட்டியும் அடக்கமுடியாத பேரலையில்—குமுறலில்—உண்டாக்கப்பட்ட கோவிற் பட்டித் தீர்மானங்களை நிறைவேற்ற உள்ளத்திலே உறுதி பூண்டு, உடலிலே கங்கணம் கட்டி, தாய் நாட்டை அன்னியர்களின் அரசாட்சியிலிருந்து மீட்பதே அண்ணுகாட்டும் அறப்போர்!

அன்று வடநாட்டு மந்திரி திவாகர், தாய் மொழியை வெட்டி வீழ்த்தி அதன் துடிதுடிப்பைக் கண்டு பரிகாசச் சிரிப்புச் சிந்தும் சழக்கர்கள்-துரோகிகள்-அவர்களுக்குப் பட்டமளிக்க, திராவிடத்தின் தன்மானத்திற்கு உலை வைத்துக் கொண்டிருப்பது போல் எழுந்து நின்று கொண்டிருக்கும் இந்தி பிரசார சபைக்கு வந்தபோது, ஆயிரமாயிரம் திராவிட வீரர்கள்—இளங்காளைகள்—காரிகைகள்—'திவாகரே திரும்பிப்போ!' என்ற இதய ஒலியை—உன்னதமுரசை-விண்ணும் மண்ணும் அதிர முழக்கமிட்டு, கறுப்புக் கொடியைக் காட்டி திராவிடத்தின் அதிருப்தியைக் காட்டி-அவரைத் தலை குனிய வைத்து, ஒழுக்கத்தை இலட்சியமாகக் கொண்டு, கட்டுப்பாட்டைக் கொள்கையாகக் கருதி, அண்ணுவின் தலைமையிலே முதல் வெற்றி கிட்டியது. கோவிற்பட்டித்

தீர்மானத்தின் முதல் வெற்றி நாட்டப்பட்டது. திராவிடத்தின் வருங்கால சரித்திர ஏட்டிலே பொன்னுல் தீட்டப்படவேண்டிய வெற்றி—திராவிடத்தின் வெற்றி—கோவிற்பட்டித் தீர்மானத்தின் முதல் ஜெய பேரிகை!

பட்டமளிப்பு விழாவில் கறுப்புக் கொடியினுல் ஏற்பட்ட நாணத்தை மறந்து விட்டவர்போல நடித்து, ஆதாரமற்ற உலுத்த உரைகளை உதறிய வடநாட்டு மந்திரி திவாகர் மட்டுமல்ல; ஆசிய நாட்டு ஒளி-உலகத்தின் தலைவர்—என போற்றப்பட்டும் நேரு மட்டுமல்ல; மாபெரும் பதவியிலிருந்து கீழே உருட்டப் பட்ட, தென்னுட்டுச் சாணக்கியர் ஆச்சாரியார் மட்டுமல்ல; சமரசமே சன்மார்க்கமென்று தேனீ விருந்திலும், பொதுக் கூட்டங்களிலும், பேசும் வாய்ச் சொல்வீரர் பிரசாத் மட்டுமல்ல, இன்னும் அவரைப் போன்ற வடநாட்டு மந்திரிகள், அவர்களுடைய கூலிகள், கங்காணிக் கபடர்கள், வருவார்கள் திராவிடத்திற்கு! கட்டாயம் வரத்தான் போகிறுர்கள்! அவர்களுக்கும் கறுப்புக் கொடிகாட்டுவதுதான் அண்ணு காட்டும் அறப்போர்!

திராவிடம் செல்வத்திலே புரண்டு விளையாட அதன் பெருங்கடலில் நாவாய்கள் பல கட்டி திராவிடக் கொடியை நாட்டி கடல் கடந்து பொருளீட்டி வாணிபத் துறையில் உலகிலே முதலிடமாய்த் தலை நிமிர்ந்து வாழ்ந்த திராவிடம், இன்று டாட்டாவின் இரும்புகளுக்குய், டால்மியாவின் சிமெண்டுகளுக்கும், பஜாஜின் பட்டாடைகளுக்கும், பிர்லாவின் பணவீச்சலுக்கும் எதிர் பார்த்துக் கொண்டிருப்பதேன்? உன் நெஞ்சைத் தொட்டுக்கேள்!

வடநாட்டில் கம்பீரமாய் வானை முட்டுமளவு தலை நிமிர்ந்து நிற்கும் தொழிற்சாலைகளைப்போல், உன் தாயகத்தில் தோற்றுவிக்க டெல்லியிடம் பல்லைக் காட்டி

கெஞ்சுவதேன்? சிறிது மிஞ்சினல் உன் நாட்டான் அச்சிறு பதவியிலிருந்தும் கீழே தள்ளப் படுவதேன்? உன் நோகும் உள்ளத்தைக் கேட்டுப் பார்!

"யாதும் ஊரே யாரும் கேளீர்" என்ற பரந்த மனப் பான்மைக் கொண்டு பாரிலே சிறந்து விளங்கிய திராவிடம்—பலபல இனமக்களை ஆதரித்த திராவிடம்—இன்று பசியாற உண்ண உணவில்லாமல் பெற்றெடுத்த தங்கப் பாளத்தை—இரத்தினத்தை—ஐந்துரூபாய்க்கும், பத்து ரூபாய்க்கும் விற்க விலை கூறி அலைவதேன்? உன் மார்பைத் தடவிக் கேள்! பொன்னிற நெற்கதிர்கள் விளைந்த உன் தங்கப் பூமியில் பருத்திக் கொட்டைச் சாப்பிடும்படி வடநாடு உனக்குக் கூறுவதேன்? சிந்தித்துப் பார்!

கல்வி விதையெங்கும் தூவி, பகுத்தறிவு மலர்களாக மலர்ந்து தரணியெங்கும் புகழ் மணம் வீசி சிந்தனைத் தென்றலாக வாழ்ந்த திராவிடத்தில் இன்று திராவிட மாணவமாணிக்கங்கள் கல்விக் கோட்டத்தில் காலை வைக்க முடியாமல் கோட்டான்களின் அருவருப்புக் குரலைக் கேட்டு அல்லற்படுவதேன்? நன்ருக எண்ணிப் பார்!

அழகில் சிறந்து பாரிலே பவழப் பாவைகளாகத் திகழ்ந்த திராவிட வனிதைகள், இன்று அடையாளந் தெரியாமல் வாடி வதங்கிக் கோர உருவமாகக் கண்ணுக்குத் தட்டுப்படுவதேன்? இதயத்தைக் கேட்டுத் தெரிந்துக் கொள்! செல்வம் தழைத்தோங்கி வறுமை இன்னதென்பதையறியாமல் அறத்தோடு வாழ்ந்த திராடவிடம், இன்று நடைப்பாதையிலே நடைப்பிணங்களை நடக்க விட்டுக் கொண்டிருப்பதேன்? ஏன்?

வீர இரத்தம் கொதிக்கவில்லையா உன் இரத்தக் குழாய்களில்? தன்மான உணர்ச்சி பீறிட்டெழவில்லையா உன் பச்சை நரம்புகளில்? நாணம் உன் உடம்பைக் குன்

றச் செய்யவில்லையா? உன் நாட்டின் வீரத் தலைவர்களை உன் தாய் தந்தையரை, உன் குருதியிலே பிறந்த சகோதரனின் படங்களை சுவரிலேமாட்ட ஆணி அடிக்கிறாய்; அந்த ஆணியாருடையது? கண்ணாடியாருடையது? சட்டம் யாருடையது? உன்மானத்தையும், உன்மனைவி, குழந்தைகளின் மானத்தையும் மறைக்க உடம்பிலே சுற்றிக் கொண்டிருக்கும் நான்கு முழம் துணியாருடையது? வெய்யிலின் கடுமை காலிலேபட்டு இரத்தம் வடிப்பதைத் தடுக்க நீ அணியும் மிதியடிகள் யார் செய்தவை? நீயா? இல்லை! வடநாட்டான்! இரத்தம் சிந்தவில்லையா உன் கண்கள்?

உன் நாட்டிலே பிறந்தவன் ஒரு திராவிடன்—உன் இரத்தத்திலே பங்குக் கொண்டவன்—பாண்டியனின் பரம்பரையிலே உதித்தவன்—மலேயாவிற்கு, இலங்கைக்கு, ஆப்பிரிக்காவுக்கு, போகிறான் வயிற்றைக் கழுவ—பிறந்த நாட்டில் வாழ வகையில்லாத காரணத்தினால்!

அங்கு அவன் எலும்புடைகிறான்; இரத்தம் சிந்துகிறான்; இரத்த வெறிபிடித்த ஏகாதிபத்தியத்தின் கடுமையான பார்வையில் அகப்பட்டு கயிற்றிலே ஊஞ்சலாடுகிறான்!

அவன் ஊஞ்சலாடும்போது ஏற்படும் காற்று, அதனால் ஏற்படும் ஒலி, திராவிடத்தில் குடிக்கொண்டு திராவிடக் குருதியைக் குடித்துக் கொண்டிருக்கும் வட நாட் நாட்டானுக்கு இன்ப ஒலியாக—ஜீவ ஒலியாக—கேட்கிறது!

திராவிடத்திலே பிறந்தவனுக்கு திராவிடத்திலே இடமில்லை! இலங்கைக்குச் செல்கிறான்—அங்கே குண

சிங்காவினுல் துரத்தப்படுகிருன்! வட நாட்டான் தாய் நாட்டை விட்டு இலங்கையிலே அவதிப்படும் திராவிடனின் தாயகத்திலே இன்பவாழ்வு வாழ்கிருன்! ஏன்?

தாய் நாட்டை மறந்து, ஈன்றெடுத்த தாயகத்தைத் துறந்து, இலங்கை. பூமியிலே பொன் விளைச்சலை ஏற்படுத்துகிருன். திராவிடன். அங்கேயும் இடமில்லை; திராவிடத்திலேயும் இடம் இல்லை! அனுதை அவன்! அய்யோ! திராவிடனே! உன் நிலை இப்படியா சீர்கேடடைய வேண்டும்? தாய் நாட்டையே பெருத யூதனு நீ? அவன் வழிப் பிறந்தவனு நீ? உன்னை பெற்றெடுத்த தாயகம் இருக்கும்போது மலேயா ஏகாதிபத்தியத்தின் இரத்த வெறிக்கும் பலியாவதும், இலங்கையிலே அவதிப்படுவதும் ஏன்? நீ நினைத்தும் பார்த்ததுண்டா? சிந்தித்துப் பார்த்ததுண்டா? இலங்கையர்களுக்கு அடிமை போலக் கிடக்கிருய்—துரத்தவும் படுகிருய்! மலேயாவில் உழைப்பைக் கொடுக்கிருய்—உதைபட்டுச் சாகிருய்! உன் தாயகத்திலே இரத்தம் சிந்துகிருய்—அன்னியர்களின் ஆதிக்கத்திஞல் அவதிப்பட்டு நடைப் பாதைகளைத் தேடிப்பார்க்கிருய்! உன் நிலை ஏன் இப்படி மாறிவிட்டது? உன் நிலை ஏன் உன் சான்ருேர்களின் வாழ்க்கைச் சிறப்புக்கு மாறுபட்டுச் சிதையுண்டு போகிறது?

கருத்திலே நாட்டங்கொண்டு சித்தித்துப்பார்; ஆர அமரச் சிந்தித்துப்பார்! உன் சிந்தனையில், உன் கருத்தில் பூப்பதுதான் உரிமை வேட்கை—உண்மையான உரிமை வேட்கை—அதை அடைய வழி காட்டுவதுதான் அண்ணு காட்டும் அறப்போர்!

ஆதரவற்று திசை தெரியாமல் கலங்கரை விளக்குத் தெரியாதக் கப்பலைப்போல உன் தாய் நாடு திணறி பெரு மூச்சு விடுகிறது. வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் புயலிலே அகப்பட்டு அடியோடு அழிவதிலிருந்துத் தப்ப நினைத்துத் தத்தளிக்கிறது.

அனுதைத் திராவிடா! ஆதரவற்ற திராவிடா! உன் முன்னுல் பார்! நன்ருக இரு கண்களையும் திறந்து பார்! உன் வாழ்வை வதைத்துப் பொசுக்கி அதிலிருந்து எழும் மணத்தை அனுபவிக்கத் துடிதுடிக்கும் வடநாட்டு ஏகாதிபத்தியம்! உன் பின்னுல் பார்! நன்ருகப் பார்! வறுமைத் தீயிலே வெந்து போயிருக்கும் உன்னுடம் பைக் கொத்தித் தின்னப் பதை பதைக்கும் ஆரியம்! அதன் பாது காவலர்களாக இருக்கும் பத்திரிகைகள்—அப்பத்திரிகைககளின் சுவடியைப்பின் பற்றும் உன் இனத்தின் கங்காணிப் பத்திரிகைகள்—பரந்தாமர்கள்—புராணங்கள்!

நீ எப்படி இன்பமுடன் வாழப்போகிருய்? நீ எப்படி செல்வமுடன் வாழ்வை வளப்படுத்திக் கொள்ளப் போகிருய்?

உன்னுல் எப்படி அமைதியோடு வாழ முடியும்? பசியினுல் துவண்டுபோய் குழந்தையை விலை கூறும் உன் மனைவியைக் கண்டு உன்னுல் என்ன செய்ய முடியும்? நீ ஏன் உன் மனைவி மானத்தை மறைக்கக் கட்டிக் கொண்டிருக்கும் புடவையை வட நாட்டானிடம் அடகு வைக்க மாட்டாய்? நீ ஏன் 'பசி பசி' என்று துடித்துப் பணமுள்ள இடத்தில் கை வைத்துத் 'திருடன்' என்னும் இழிவானப் பெயரைத் தாங்கிச் சிறைக்குள் புகமாட்டாய்? உன் மனைவி ஏன் நீ கண்ணயர்ந்து தூங்கும்போது கட்டாரியால் உன் கழுத்தை வெட்ட மாட்டாள்?

உன்னால் வாழ முடியாது; இன்பமுடன் வாழ முடியாது, வட நாட்டுப் பாசக்கயிறு, அதன் ஏகாதிபத்தியம் உன்னை விட்டகலும் வரை உன்னால் அமைதியோடு, இன்பத்தோடு, வாழமுடியாது, ஆரியம் விரித்த வஞ்சகமாய வலையில் தெரிந்தோ தெரியாமலோ அகப்பட்டு அவதிப்படுவதைத் தடுக்க, அதன் வலையைக் கிழித்தெரியும் வரை நீ சீருடன் விளங்கமாட்டாய்! மரக்கிளையிலே தொங்குவாய்—பசியின் காரணத்தினால்!

கிணற்றிலே மிதப்பாய்—வறிமையின் காரணத்தினால்! ஆற்றிலே அடித்துக்கொண்டு போகப்படுவாய்—இன்பமுடன் வாழ வகையறியாத காரணத்தினால்! வட நாட்டு ஏகாதிபத்தியம், ஆரியமாயை இரண்டும் ஒழிய—மறைய—கரைய—அவைகளிலிருந்து நீ விடுபட வழி இல்லையா? ஏன் இல்லை?

தளர்வுற்ற உன்னுடம்பு ஊக்கத்தைப் பெற வேண்டும். ஆற்றலில்லாத உன் தேகம் உறுதியைத் தேடல் வேண்டும்.

'திராவிடத்தை அடைவேன்—இல்லையேல் உன் துப்பாக்கிக் குண்டையாவது மார்பிலே பெறுவேன்' என்ற இலட்ச்சியத்தை நீ வீரவாளாகத் கொள்ளல் வேண்டும். வளைந்துப் போயிருக்கும் கழுத்தைச் சரிபடுத்தித் தலை நிமிர்ந்து, உன்னை வெட்டிப் புதைக்க அடக்கு முறையைத் தீட்டிக் கொண்டிருக்கும் ஆளவந்தாரைப் பார்க்கும் திறன் வேண்டும். 'நான் திராவிடன், திராவிடம் திராவிடர்க்கே' என்ற உன்னத மூச்சை—இலட்ச்சிய மூச்சை-நீ பெற வேண்டும். உன் தாயகத்கத்திற்குக் கேடு விளைவிக்கக் கருதியிருக்குக்கும் துரோகிகள், சதிகாரர்கள், அவர்களின் சதிச் செயல்களை கொல்லவேண்டிய ஆற்றல் வேண்டும்.

திராவிடச் சிங்கமே! பூனையைப் போலப் பதுங்காதே! புலியைப்போலச் சீறிவா! சுண்டெலியைப் போல வளைக்குள் நுழையாதே! சிறுத்தையைப் போல பாய்ந்துவா! அச்சம் கொண்ட கோழையைப் போல பின் வாங்காதே! வீரம் நிறைந்த ஏறு போல முன்னுக்கு வா! உன் முன்னோர்களின் சரித்திரத்தில் மலிந்துள்ள வீரச் செயல்களுக்கு நீ ஒரு எடுத்துக் காட்டாக இரு! அஞ்சாத நெஞ்சத்தோடு ஆற்றல் நிறைந்த உடலோடு வா! எங்கே? அண்ணு காட்டும் அறப்போருக்கு!

அண்ணு காட்டும் அறப்போரில் 'நான் பிறந்தநாடு எனதே—என் இனமே இந் நாட்டை ஆளுதல் வேண்டும், என்ற வீர ஒலி துடிதுடிக்கும் உன் துடிப்புள்ள இதயத்திலிருந்து வெற்றிக் கீதமாக வெளிவரும் காலத்தில், உன்னை நோக்கி தடியடிகள் தாராளமாகப் பாய்ந்து வரலாம்—வரும்—உன் விரிந்த மார்பைத் தயக்காமல் காட்டு!

துப்பாக்கிக் குழாயிலிருந்து ரவைகள் பறந்து வரலாம்—வரும்—உன் பரந்த மார்பை அஞ்சாமல் காட்டு! தூக்கு மேடையில் உன்னுயிரைக் குடிக்க தூக்குக் கயிறு ஆனந்தத்தோடு ஊஞ்சலாடலாம்—ஆடும்— பரிகாசச் சிரிப்பை அதற்குப் பரிசளித்து விட்டு!, "என் தாயகத்திற்கு நான் கொடுக்கும் பரிசு" என்று பலமான குரலில் கூவு! சிறையிலே தள்ளுவார்கள்—தலைமுடிதான் சிரைக்கப்படும்! மனம் வருந்ாதே—மனம் விட்டுச் சிரி! உன்னை ஈன்றெடுத்த தாயகத்தின் உரிமைக்காகக் குருதியை குடம் குடமாகக் கொட்டு! குலை நடுங்காதே!

•

குருதி குடித்துக் குடித்து உதடுகளிலே காய்ந்துப் போயிருக்கும் இரத்தக் கறையை சொர சொரப்பான

நாக்குகளால் நக்கிநக்கி இரத்த பசியினுல் பதைபதைத்து, அவதிப்பட்டு. 'உரிமைக்குப் போராடும் வீரன் யார்? விடுதலைக்காக அறப்போரில் பங்கு கொள்ளும் சூரன் யார்? விடுதலைக்காக தாய்கத்தின் அடிமை விலங்குகளை தகர்த்தெறிவதற்காகத் துடிதுடிக்கும் தீரன் யார்? என்று கழுகுக் கண்களிலே கண்டு பிடிக்க ஆவலோடு எதிர்பார்க்கும் ஏகாதிபத்தியம்—மக்களிடம் தேன்மொழி பலபல சிந்தி, மக்களை மயக்கி, வாக்குரிமை பெற்ற பிறகு அடக்கு முறையை ஏழைகளின் மீது வீசி, அவர்களை வதைத்துக் குருதியைக் குடித்து சுவைத்து கோபுரம் ஏறின கோமான்களைப் பெற்றிருக்கும் ஏகாதிபத்தியம்—சமுதாயத்து ஏற்றத் தாழ்வுகளைக் களைந்தெறிந்து பொதுவுடமை நாடாக்கத் துடிதுடிக்கும் முற்போக்காளரை 'சமூக எதிரி' என்ற பெயரில் சுட்டுச்சுட்டு துப்பாக்கி முனையைச் சூடாக்கிக்கொண்டு, சிங்காதானம் பெற்ற சீமான்களைக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியம்—நாட்டிலே நஞ்சு விதைகளைத் தூவி, நாட்டின் மாணிக்கங்களை வஞ்சகத்தால் மாளவைத்துக் கொண்டிருக்கும் கூட்டத்தின் நாற்றமெடுத்த வண்டவாளங்களை தெள்ளந்தெளிய நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்கும் எழுத்தாளர்களை சிறையிலிட்டு வாட்டியெடுத்துக்கொண்டு அரியணை அடைந்த அறிவாளிகளைக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியம்—தாயகத்திலே பிறந்தவர்களின் தாய்ப்பாலில் கலந்திருக்கும் தாய் மொழியைத் தந்திர வார்த்தைகளால் குழித்தோண்டி புதைக்க திட்டமிட்டு வேலை செய்து, புகைவண்டி நிலையங்களின் பலகைகளிலே திராவிட மொழியை—தமிழ் மொழியை—கடை மொழியாக எழுதி அதன் மானத்தை சீர் குலைத்துக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியம்—அண்ணுவின் தலைமையில் நீ அறப்போரில் இறங்கும்போது உன் பொன்னுடலைத் தழுவும்—தயங்காதே! உன் தங்கமான உடலை அணைக்கும்—அலறுதே!

நீ தயங்கினல் உன் நாடு சீர் கேடடையும்—படு குழியில் புதைக்கப்படும்! நீ அஞ்சினல் உன் தாயகம் அழிந்துவிடும்—அடியோடு வெட்டி வீழ்த்தப்படும்!

உன் தாய் மொழியை நீ இழப்பாய்—அதன் சிறப்பை நீ இழப்பாய்! நீ ஒரு அடிமை—அன்னியனுக்கு அடிமை! அந்த அடிமை, விலங்கை உடைக்க உனக்கு வழி காட்டுவதுதான்—உன்னை தேற்றுவது தான்— அண்ணு காட்டும் அறப்போர்!

குருதி ஆற்றிலே நீந்தி விளையாடிய வீரப் பெருந் திராவிட வழித் தோன்றலிலே உதித்திட்ட வீரத்திராவிடா! நாவசைத்து நாசத்தை வரவழைத்துக்கொண்ட வடவர்—கயவர்—மடையர்—கனக விசயர்களைத் திராவிட வேந்தனின் காலடியிலே மண்டியிட வைத்த குன்ருப் புகழ்த் திராவிட மரபிலே பிறந்திட்ட திராவிடா!

உன் முன்னேர்களின் அரியணையை நீ மறுபடியும் அடைய வேண்டுமானல், உன் பாண்டிய பரம்பரையின் சிங்காதானத்தை நீ அடைய வேண்டுமானல், திக்கெட்டும் உன் புகழ் பரவ வேண்டுமானல், டாட்டாவின், பிர்லாவின், டால்மியாவின், பஜாஜின், செல்லாராமின், ஸூரஜ்மாலின்—வாணிகப் பிடியிலிருந்து, நீ விலகு. மறுபடியும் திராவிடத்தில் நீ வாணிகத் துறையைத் துவக்க வேண்டுமானல், நேருவின், படேலின், பிரசாத்தின், பலவந்த்சிங்கின் ஆணவ அரசுப் பிடியிலிருந்து நீ அகல வேண்டுமானல், மறுபடியும் திராவிடத்திலே உன் அரசாட்சியை நிறுவ வேண்டுமானல், திராவிடப் பெருங்கடல்களில் 'ஜல உஷா', 'ஜலஜவஹர்', 'டெல்லி' போன்ற கப்பல்களின் போக்குவரத்தை நிறுத்தி மறு

படியும் 'செங்குட்டுவன்' 'கரிகாலன்' 'இளங்கோவன்' போன்ற கப்பல்களை திராவிடக் குடியரசுக் கொடியைத் தாங்கி அயல் நாடுகளுக்குக் கம்பீரமாகச் செல்லவேண்டு மானால், அதற்காக அண்ணா காட்டும் அறப்போரில் உன் ஆவியைத் தியாகம் செய்ய நேரிடும்போது அஞ்சாமல் தியாகம் செய்யவேண்டும்.

உயிர் இனிமையானதல்ல, அஞ்சாத் திராவிடர் களுக்கு! உயிர் இனிப்பானதல்ல சிங்கத் திராவிடர் களுக்கு! தாய் மொழி இனிப்பு—தாய் நாடு இனிமை—இவை யிரண்டுந்தான் உயிர், உண்மைத் திராவிடர் களுக்கு!

அண்ணாவின் தலைமையில்—திராவிடத்தின் மாணிக் கத் தலைவர் காட்டும் அறப்போரில்—உன் நாட்டு உரி மைக்காகப் போராடும் காலத்தில், தடியடி உன் விலாவை நொறுக்கும்—'அய்யோ!' என்று அலறாதே! வேதனைப்படாதே! 'அய்யோ!' என்ற அபயக்குரல் சோழனின் சந்ததியினருக்கு. பாண்டியனின் பரம்பரை யினருக்கு, சேரனின் செங்கீர் காரர்களுக்குக் கிடையாது! உன் அன்னை உச்சி மோந்து முத்தமிட்ட இடத்தில் ஏகாதிபத்தியத்தின் ரவை பாய்ந்தால், 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்று அறை கூவு! அந்த அறை கூவ லிலே கொழுந்துவிட்டு எழும்பி நிற்கும் உறுதியைக் கண்டு இரத்த வெறி பிடித்த அரசபுரியினருக்கு அச்சம் பிறக்கட்டும்—கிலி பிறக்கட்டும்!

அரசியல் என்பதோர் கார்மேகக் கூட்டம். அதைக் கலக்கடிக்கப் புரட்சி யென்னும் புயற்காற்றுப் போதும்; கார்மேகம் மழைத்துளிகளாகக் கொட்டும், அடக்கு முறையைப் போல! மழைத் துளிகளால் மாநிலம் எவ் வளவு நன்மையைப் பெற முடியுமோ, அவ்வளவு நன் மையை அடக்கு முறையால் மக்கள் அடைய முடியும்.

அடக்கு முறை ஈட்டிகள் பாய்ந்து பாய்ந்து தழும்பேறிய உடல்தான் வருங்காலத்தில் திராவிடம் அடையப்போகும் உரிமையை—சுதந்திரத்தை—காப்பாற்ற முடியும்—மக்களேயும், மாநிலத்தையும் மழைத் துளிகள் காப்பாற்றுவதைப்போல! இதை ஆளவந்த அசட்டுத் தன்மையினருக்கு நீ காட்டவேண்டும்.

எத்தனை எத்தனை போலீஸ் பட்டாளத்தைக் கூப்பிட்டு வரமுடியும் அவர்களால்? எவ்வளவு எவ்வளவு இராணுவப் படையினரை திராவிடர்களின் மீது ஏவவிட்டு வேடிக்கை பார்க்க முடியும் அவர்களால்? நான்கு கோடி திராவிட மக்கள்! நாவலந் தீவுக்குச் சென்று திராவிடக் கொடியைப் பறக்கவிட்ட பரம்பரையில் விதைத்திட்ட மக்கள்! வடநாட்டு வம்பர்களேக் கடந்து இமயத்தில் வீரக்கல் நாட்டிய திராவிட சந்ததியினரில் காய்த்திட்ட மக்கள்! ஆரியப்படைக் கடந்து வெற்றி வாகை சூடிய முன்னேர்களின் குருதியிலே பழுத்திட்ட மக்கள்—திராவிட மக்கள்!

கிரேக்க நாட்டு பார்மன்னர் அலெக்ஸாந்தர் வடநாட்டின் மீது படை யெடுத்து, நாட்டிற்குள்ளே வந்த அப்பெரு வேந்தனுக்கு, ஆராதனை காட்டிய வடநாட்டு மக்களால்—அவர்களின் வழிவழிப் பிறந்தவர்களால்—காந்தியின் பெயரிலே சாந்தியே இலட்ச்சியமென வெளி வேடம் போட்டு கட்டிய அரசுக் கோட்டையில் அரசு புரியும் வடநாட்டு வல்லடிகளுக்கு வீரமே உருக்கொண்ட நாம்—அகநானூறு தந்த தாய்களின் குழந்தைகளாகிய நாம்—அடங்கி நடப்பதா?

கஜினியும், தைமூரும் கைபர் கணவாயின் மூலம் வட நாட்டைத் தாக்கும்போது வீரமில்லாமல் ஆண்டவனை வேண்டி அபயக் குரலிட்டு ஒன்றும் பலிக்காமற்

போகவே அக் கொள்ளைக்காரர்களுக்கு வரவேற்புரை வாசித்தளித்த வடநாட்டு மக்கள்—அவர்களுடைய பரம்பரையில் உதித்த வம்பர்கள்—தீரமே அழகெனக் கொண்ட நாம்—புற நாநூறு போற்றும் அன்னைகளின் கருவுயிர்களாகிய நாம்—அடங்கி நடப்பதா?....

இத்தகைய எண்ணங்கள்—நினைவுகள்—உங்கள் உள்ளத்திலே தலை நிமிர்ந்து நிற்கும்போது, அரசாள வந்த ஆண்டிகள்! அடக்கு முறையே கை தேர்ந்த ஆயுதமென நினைக்கும் ஏகாதிபத்தியம்—அது ஏவும் அடக்குமுறை ஆயுதம் உன் வயிற்றைக் கிழித்துக் கொண்டு சென்றாலும், உயிருக்கு உலையாக முடிந்தாலும், துச்சமாகத் தெரியும்; தூசுபோலத் தெரியும்; துரும்புப் போலத் தெரியும். அடக்கு முறையை அப்போது நீ இன்பமுடன் வரவேற்பாய்—வீரமுடன் வரவேற்பாய்!

ஆண்ட இனத்தைக் காட்டிக்கொடுத்த முதல் எதிரி—குலத்தையே குழி தோண்டிப் புதைக்கத் தோன்றிய குடிகேடன்—விபூஷணன்—அந்த வீணன்—அவனுடைய சின்னங்கள்—வழி வழிப்பற்றும் பதவிப் பித்தர்கள்—பெற்ற தாயகத்தை, வளர்த்த தாய் மொழியை அலட்சியப்படுத்தும் அக்கிரமக்கார அறிவிலிகள்—அறிக்கை விடுவார்கள் உனக்கு—நீ அண்ணாவின் தலைமையிலே அறப்போரில் இறங்கும்போது! கத்துவார்கள்—காது கொடுக்காதே! அலறுவார்கள்—அச்சமடையாதே கதறுவார்கள்—கலக்க மடையாதே! கனைப்பார்கள்!

அவர்களுடையக் கதறலை, அலறலை நீ கேட்டுக் கேட்டுதான் நாசமடைந்து போனாய்—பொலி விழந்துப் போனாய்! உன் நாடு அழிந்துக் கொண்டிருக்கிறது! உன் மொழி சீரழிந்து வருகிறது!

உன் திராவிட தலைவர்கள் திராவிடம் ஓர் தனி நாடு என்பதற்கு ஆதாரம் பல காட்டியிருக்கிறார்கள், பல பல பொதுக் கூட்டங்களில், நூல்களில். எடுத்துக்கூறு அவைகளை அந்த வீணர்களுக்கு! நிலப்பரப்பை ஆதாரம் கொண்டு, திராவிடநாடு, வடநாடு என்று பிரிக்கும் எல்லைக் கோட்டைப் புறக்கணித்துவிட்டு, கலாச்சாரம், மொழி, இனம், நடை உடை பாவனை, இவைகளைப் பற்றி சிந்திக்காமல், , எல்லோரும் இந்நாட்டு மக்கள்! எல்லோரும் இந்தியர்' என்று கூறும் உலுத்தர்களுக்கு, ஆங்கிலேயர் இந்நாட்டில் நுழையாத முன்பு திராவிட நாடும் வடநாடும் ஒரே ஆட்சியின் கீழ் ஆளப்பட்டு வந்த தென்று சரித்திர ஏட்டிலே ஆதாரங்காட்ட முடியுமா வென்று சவால் விடு—இடித்துக் கேளு!

பாலூட்டி, சீராட்டி, அணைத்து முத்தமிட்ட உன் அன்னை ஒரு வேளை அண்ணா காட்டும் அறப்போரில் நீ பங்கெடுத்துக் கொள்வதற்கு அனுப்பத் தயங்குவாள். அகநானூறு அன்னையை நீ அவளிடம் எடுத்து காட்டு! கட்டியணைத்து களிப்புக்கொண்ட உன் தந்தை, நாட்டை அன்னியரின் பிடியிலிருந்து மீட்கப்போகும் அறப்போருக்கு உன்னை அனுப்பத் தடுமாறுவார். புறநானூறு தரும் அறிவுரையை அவருக்கு எடுத்துக்காட்டு! ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே; சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே; வேல் வடித்துக்கொடுத்தல் கொல்லற்குக் கடனே; ஒளிறுவாள் அஞ்சமர் முருக்கித்தான் மடிந்து வீழ்தல் மைந்தற்குக் கடனே என்று பெற்றோர் கடமைகளையும் வகுத்துக் கூறிய புறநானூறு அன்னையின் உரையை அவருக்கு எடுத்து விளக்கு! நீ தலை நிமிர்ந்து வாழத் திராவிடப் பெருங்குடியினர் இயற்றிய வீர இலக்கியங்களை உன் பெற்றோரின் மீது அள்ளி அள்ளி வீசு!

உன்னை நீ தயார் செய்துக்கொள் !

உன்னை நீ திடப்படுத்திக் கொள் ! உன் பரம்பரையில் உதித்து மறைந்திட்ட வீரச் சிங்கங்களை எண்ணிப் பார் ; இன்று நீ இருக்கும் கோழைத்தனமான நிலையைக் கருதிப்பார் ! வெட்கப்படுவாய்—வேதனைப் படாதே ! உன்னை அடக்கி ஆளும் ஆட்சிக்கு அண்ணு காட்டும் அறப்போரின் மூலம் எடுத்துக்காட்டு, உன் உள்ளத்தின் இடத்தில் கிடந்து கொதி கொதிக்கும் உரிமை வேட்கையை !

"வீழ்ச்சியுற்ற திராவிடத்தில் எழுச்சி வேண்டும்—விசை யொடிந்தத் தேகத்தில் வன்மை வேண்டும்"-இது உன் கவிஞரின் குரல்—நம் கவிஞரின் குரல் ! தெய்வீகக் கவிஞரின் குரலல்ல—புரட்சிக் கவிஞரின் குரல் ! ஆஸ்தானக் கவிஞரின் குரலல்ல—ஆளப்பிறந்த மக்களுடைய கவிஞரின் குரல் ! உள்ளத்தைத் தொட்டு, 'நான் சொல்வது சரிதானே ?' என்று திராவிடனைக் கேட்கும் அழியாக் குரல்—உன் பாரதிதாசனின் குரல் !

திராவிடத்திலே பிறந்து, திராவிடத்திலே வளர்ந்து அரும்பு மீசைகளை உதடுகளின்மேல் கொண்டு, வாலிப ஏறு நான் எனக் குவலயத்திற்கு அறிவிக்கும் திராவிட வாலிபனே ! உனக்காக அண்ணுவின் அறப்போர் காத்துக் கொண்டிருக்கிறது. அந்த 'அறப்போர்' வாயசைத்து உன்னை இருகைகளாலும் அழைக்கும்போது ஆண்மையுடன் கிளம்பு ! சிங்காரத்திராவிடம் பெற்றிருக்கும் சண்டாளர்களை— அவர்களின் சதிச் செயல்களை- அறுக்க உன் கட்டுப்பாடு கேடயமாக—ஒழுக்கம் கூரிய வாளாக இருக்கட்டும் !

தாயகத்திலெ தோன்றி, தாயகத்திலே குழந்தைப் பேறுகளைப் பெற்றத் திராவிடனே ! உன் வருங்கால சங்

ததியினர், உன் குழந்தைகள் உரிமையுடன் வாழ, நீ பெற்றெடுத்த செல்வங்களை அண்ணாவின் அறப்போருக்கு அனுப்பு — அதில் நீயும் கலந்துக்கொள்ள தயாராக இரு!

திராவிட பெண்மணியே! உன் நாட்டு விடுதலைப் போராட்டத்திலே நீயும் கலந்து கொள்ளவேண்டும்!

திராவிடக் கண்மணியே!

நீ செல்வமுடன் வாழ—சுரண்டப்படாமல் வாழ—விடுதலையுடன் வாழ—அண்ணா காட்டும் அறப்போரில்-திராவிட தளபதி உன்னை அழைக்கப்போகும் அறப்போரில்—கலந்துக்கொள்! அகநானூற்றின் அடையாளமே! புறநானூற்றின் சின்னமே! உன்னையும், உன் செல்வங்களையும் நம்பிக் கொண்டிருக்கிறது திராவிடம்! துரோக மிழைக்காதே அதற்கு! வஞ்சனை புரியாதே அதற்கு! உன் பரம்பரையின் வீரத்தை, விடுதலை வேட்கையைக் காட்டு **அண்ணா காட்டும் அறப்போரில்!**

# அறிவுப்படை திரளட்டும்

'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற இலட்சியத்தை இதயகீதமாகக்கொண்டு, இன விடுதலைக்கான, இன அரசுக்கான அறப்போர்—அண்ணு காட்டும் அறப்போர் நடத்திட, நம்மை நாம் தயாரித்துக்கொண்டு வருகிறேம், மேலும் தயாராகி வரவேண்டும்!

அறிவுப்படை திரளட்டும்—அறப்போர் நடத்திட முதலில் அறிவுப்படை திரளவேண்டும், திரட்டப்பட வேண்டும், நாடெங்கும்.

அப்போதுதான், திராவிடநாடு திராவிடர்க்காகும், ஆக்கவும் முடியும்.

அறப்போர்—சொந்த நாட்டைப் பிறர் பிடியினின்றும் விடுவித்திடும் போர்—விடுதலைப்போர் இன விடுதலைப்போர் திராவிட இன விடுதலைப்போர் நமது அறப்போர், அறப்போர்க்களத்திலே அணி வகுத்து நின்றிடும் அறிவுப் படையை—அறிவு ஆயுதத்தை—இன உரிமை யுணர்ச்சியை, மக்களிடையே ஊட்டி, மக்களை, திராவிட இன மக்களைத் தயார் செய்தாகவேண்டும்.

மக்களனைவரும் அறிவுப்படை வரிசையிலே அணி வகுத்து நின்றிடும் நிலை, மன நிலை - எண்ணத் தெளிவு பெற்ருல்தான்—பெற்றிடும்படி செய்தால்தான் திராவிட நாட்டை அடைவது, அடைந்திடுவதின் முழுப்பயனையும் காண முடியும்.

அன்பு, அருள், அறம், அறிவு—ஆராய்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பொது உரிமை—பொது உடமை நாடாக, திராவிடநாடு விளங்க முடியும்!

அறிவு—மனிதருக்கு இல்லாமலில்லை, இருக்கத் தான் இருக்கிறது,

மனிதன் மிருகங்களினின்றுமாறுபட்டு, வேறுபட்டு நன்மையெது—தீமை யெது என்று தெளிந்து—உணர்ந்திட நடந்திட இயற்கையிலேயே அறிவு பெற்றுத்தான் இருக்கின்றனர்.

சமயம்—சந்தர்ப்பம், சூழ்நிலை காரணமாக மனிதரில் சிலர் சிந்தனைத் தெலிவு மிக்கவர்களாகவும், சிலர் சிந்தனைத் தெளிவு குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இத்தகைய சமயம்—சந்தர்ப்பம் சூழ்நிலை பேதம் ஆகியவை காரணமாக சிந்திக்காமலும், சிந்தித்தாலும், தெளிவு பெற்றாலும், பெற்றிருந்தாலும் அதன்படி செயலாற்ற முடியாதவர்களாகப் பலர் செயலற்றுக் கிடப்பது மட்டுமல்ல, சிந்தனைத் தெளிவிற்கு மாருன முறையிலேயே வாழ்வை நடத்திட வேண்டிய நிலைக்கு, நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டு, நாளடைவில், சிந்திக்கும் திறனை இழந்து, தேவையல்ல என்று ஒதுக்கி—சிந்திக்கத் தெரியாதவர்களாக—சிந்திக்க மாட்டாதவர்களாக, சில பல நேரங்களில் சிந்திக்கவேகூட மறுப்பவர்களாக மாறி விடுகின்றனர்!

பழக்கம்—வழக்கம்—ஜாதி முறை சமய நெறி—சன்மார்க்க போதம், சகுனம் சாஸ்திரம் என்பன வற்றின் பேரால், எப்படிபோ மனித சமுதாயத்தில்—சமூகத்தில் மேன்மையும், மேலான குனியாது வளையாது பிறவி ஆதிக்கம் செலுத்தியே சுகபோகிகளாக வாழ்ந்திடும் கூட்டத்தின் கட்டுப்பாடாகத் திட்டமிட்டு மக்களது மனத்தெளிவை அறியாமை எனும் இருட்டிலேயே அமிழ்ந்து கிடக்கும்படி செய்து விட்டிருக்கின்றனர்.

அறியாமை—சிந்தனைத் தெளிவு அற்ற அவல நிலை—சூழ்நிலை மனிதரை மனித வாழ்விலிருந்தே மிகத் தொலைவிற்கு மிருக வாழ்விற்கும் மிகமிகக் கேடான, கீழான வாழ்வு வாழ்ந்து—அதிலேயே திருப்தியும் கொண்டிடும் அளவிற்கு மனித அறிவை மங்கிடும்படி செய்திருக்கிறது.

இந்த அறியாமை, மக்களினத்தை வழி வழித் தொடர்ந்து படர்ந்து, வேரூன்றிடும்படி ஆண்டவன், பக்தி—பாராயணம், அருட்கதைகள்—திருவிளையாடல் என்ற பக்திப் போதனைகளும், மதம்—ஜாதி முறைகளும், தலைவிதி—மோட்சம் நரகம் போன்ற தத்துவங்களும் பெரிதும் மக்களின் உள்ளங்களிலே பலப்பல வித வழிகளிலே, உருவங்களிலே, உபதேசம், வழிபாடு, நன்னெறி, பாவம்—புண்ணியம், என்றும் பரப்பப்பட்டு வந்துள்ளது.

கடவுள்—ஆண்டவன் பற்றிய மக்கள் கருத்து—திராவிட மக்களின் கருத்து என்ன? ஜாதிமதம்—சாஸ்திரம் சம்பிரதாயம்—மக்களுக்கு—திராவிடருக்குப் போதிப்பதுதான் என்ன?

அறியாமை வளர்ந்து மக்களிடம் மேலும் வேரூன்றிடும் பணியைத்தானே இவைகள் செய்கின்றன?

'கடவுள் விட்டவழி' கொடுத்து வைத்தது அவ்வளவுதான்,' 'போன ஜன்மத்தின் செய்த பாவ புண்ணியப்படி தானே நடக்கும்' என்றெண்ணி, மக்கள் தங்களது வளமற்ற வரண்ட வாழ்விற்கும் வறுமைக்கும் தமக்குத்தாமே ஆறுதலைப் பெறுதலும் கொண்டு தமது உழைப்பையும் ஊக்கத்தையும் உணர்வையும் பிறர் சுரண்டிச் சுகபோகிகளாக வாழ்வதைக்கண்டும் கவலைப்படாது கண் மூடி வாழ்வு வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுக் கிடக்கின்றனர்!

கடவுள்—மனிதனது செயல்களைக் கண்காணித்து நல்ல தீர்ப்பு வழங்குபவர்.

•

கடவுள்--மனிதனைக் கட்டுப்படுத்த நல்லதை செய்ய வைத்திட ஓர் கருவி—என்று கூறிடுகின்றனர்,

•

மனிதன் தனது செயல்களைச் செம்மைப் படுத்தி சீரியவாழ்வு வாழ 'கடவுள் உணர்ச்சி தேவை யென்றும் கூறப்படுகிறது.

ஆனல், இன்றைய கடவுள்கள், நாட்டிலே, நாட்டு மக்களிடையே காணப்படும், காட்டப்படும் கடவுள்கள், புண்ணிய கதைகள் என்றும் புராணங்கள் என்றும் கூறப்படும் ஏடுகளிலே காணப்படும் கடவுளின் போக்கைக் காணும்போதும் படிக்கும் போதும் 'கடவுள் உனர்ச்சி' இத்தகைய 'கடவுள் உணர்ச்சி' மக்களுக்குத் தேவைதானு? என்று கேட்காமலிருக்க முடியவில்லையே!

தாருகா வனத்து ரிஷி பத்தினிகளைக் கெடுக்க முனைந்த சிவனைக் கடவுள் எனக்கொள்ள வேண்டுமா!

ஆண் கடவுளான விஷ்ணு பெண்ணுருவை-மோகினி அவதாரத்தை மோகித்துப்புணர்ந்து அய்யனரைப் பணைப் பெற்றெடுத்த சிவனுரை, வாழ்விற்கு வழி காட்டியெனக் கொள்வது, நன்ரு நீதியா? முறைதானு?

ஜலந்திராசுரனுடைய மனைவியை, அவனைப்போலவே உருக்கொண்டு கெடுத்த விஷ்ணு, காமாந்தாகார்க் கடவுளாகக் கருதப்பட்டு ஒதுக்கப்பட வேண்டியவர்தானே?

கற்பு கெட்டது என்று கண்டு கொண்ட ஜலந்த ராசுரனது மனைவி தீக்குளித்து எரிந்து சாம்பலாகவும் காமப் பித்தேறிப்போனத் விஷ்னு கண்தெரியாமல் அவளது சாம்பலிலே புரண்டாராமே ?

அவளது சாம்பற் குவியலிலே முளைத்தெடுத்த துளசிச் செடியை மாலையாக அணிந்த பின்னர்தான் விஷ்ணுவின் விபரீத 'காமப்பித்தம், போதையும், வெறியும் தணிந்தது என்றும், அன்றுமுதல் துளசி' விஷ்ணுவுக்குப் பிரியமான பொருளென்று, ஆலயங்களிலும் ஆண்டவனைப் பஜிக்கும்போதும், பூஜிக்கும்போதும் கையாளப் பட்டது என்றும் சில புராணங்களில் காணப்படுவதைக் கண்டும் கேட்டும் படித்தும் விட்ட பிறகு எப்படி இத்த கையோரை கடவுளென மதித்துப் போற்றித் தொழ முடியும் ?

மான ஈனமற்ற, மக்களைவிட, கீழ்மக்களைவிடக் கேவலமான, காட்டுமிராண்டித் தன காமாகக்களியாட்டங்களில் ஈடுபட்ட கடவுள்களைப்பற்றிப் பேசினால்; ஆராய்ந்தால், நாத்திகர் என்று தூற்றுவது நல்லதா ?

'நாத்திகர்' என்று குறை கூறி விட்டால் மட்டுமே போதுமா ?

கடவுளைப் பாதுகாத்திட முடியுமா, வெறும் தூற்றுதலால் மட்டுமே ?

'கடவுள்' என்பது மனித வாழ்விலே ஒருகட்டுப் பாட்டையும், திட்டத்தையும் நன்நடைக்கு ஒரு முன் மாதிரியாகவுமன்றோ இருக்கவேண்டும் ?

இதை விட்டு பிறர் மனைவியையும் சிறு மதி படைத்தவனையும் விஷ்ணுவையும், இது போன்ற

தாறுமாறான குணம் படைத்தவர்களை கடவுள் என்று காட்டுவது, கருத்து வளர்ச்சி விஞ்ஞான ரீதியாக வளர்ந்து வரும் இந்தக் காலத்திற்குக் கொஞ்சமும் ஏற்ற தல்ல என்பதைக் 'கடவுள் காப்பாளர்கள்' நிச்சயம் உணர்ந்தாக வேண்டும்.

அன்பே கடவுள், அறிவே கடவுள், அருளே கடவுள், பிறர் துன்பம் தவிர்த்தலே மனித வாழ்வின் இலட்சியம், தானும் வாழவேண்டும், தன்னைப்போலவே பிறரும் வாழவேண்டும்; வாழ்வோம், பிறரையும் வாழ வைத்து வாழ்வோம், என்ற மனம், மனித மனம் மனிதரிடையே வேரூன்றிப் பரவி நிலைத்திட வழியும், வகையும், நல்லறிவுப் பாதைகளையும் ஊட்டிடும் முறையிலே கடவுள் தத்துவம் அமைந்தால், அத்தகைய கடவுளை யார் கூடாது என்று கூறுவர்?

நல்ல கடவுளை— மனிதனுக்கு உண்மையிலேயே நல்லது செய்யும் கடவுளை, நாம் வேண்டாமென்று கூற வில்லை—கூறவே மாட்டோம்.

மாறாக மக்களைத் தவறான பாதையிலே, இழுத்துச் செல்லும் இழி செயல்களைச் செய்திடும் கடவுள், தேவை தானா? சிந்தித்து, சீர்தூக்கிப்பார்த்து, பின்னர் பின் பற்றுங்கள், என்று எங்கள் இயக்கம், நடமாடும் கல்லூரி—நல்லறிவுக் கல்லூரி நாட்டிலே பேசுவது முறை தானே? தேவையான திருப்பணியைத் தானே செய்கிறோம்.

இத்தகைய திருப்பணியைத்தான் மேலும் மேலும் மக்களிடையே நடமாடுங் கல்லூரிகள் செய்தாக வேண்டும்!

மக்கள்—கடவுள்—மதம் சாஸ்திரங்களின் பேரா லும், பழக்கம் வழக்கம்—சகுனம், ஜோதிடம் முதலிய குருட்டுக் கொள்கைகள்—வழியில் சென்று தங்களது மதியைப் பறி கொடுத்து, 'விதிவிட்ட வழி,' என்று, வாழ வழியற்றவராக இருண்டவாழ்வு—வரண்ட வாழ்க்கை வாழ்வதை மாற்றியாக அறிவுப் பிரச்சாரம் செய்து வரவேண்டும்.

அறிவுப் பிரச்சாரம் ஆண்டவன் முதல் சாதாரணத் தொழில் முறைவரைக்கும் மனித வாழ்வின் எல்லாத் தறைகளிலும் செய்து நாட்டிலே நல்லறிவுப் படை திரட்டியாக வேண்டும்.

இந்தப்பணியை, பேச்சு, எழுத்து—நாடகம் சினிமா முதலிய சகல சாதனங்களையும் துணையாகக் கொண்டு செய்து வருகிறது எங்கள் இயக்கம்.

பொது உரிமை—பொதுஉடைமை—என்ற பண்புகள் கொண்ட மனித சமுதாயத்தை உறுவாக்கிட, அறிவுப் படை திரளட்டும், நாடெங்கும்!

பொது உரிமை—மனிதர் அனைவருக்கும் உரிமை மனிதராக வாழ உரிமை உண்டு என்ற நிலைமையாகும். பிறப்பால் மனிதரில் பேதமில்லை உயர்வு தாழ்வுமில்லை மனிதனாகப் பிறந்தவர் அனைவரும் சரிநிகர் சமானமாக வாழவேண்டும்—வாழ உரிமையுள்ளவர்களே என்ற அடிப்படையைக் கொண்டதே பொது உரிமை.

உலகில் மனிதர் வாழ, உடைமை—பொருள்—வாழ்க்கை வசதிகள்—உணவு-உடை-உறையும் இடம் ஆகியவை தேவைப்படுகிறது.

பொது உரிமையுள்ள மனித இனம், உலக உடைமை களையும் பொதுவாக, அனைவரும் பகிர்ந்து அனுபவிக்க வேண்டும் என்பதே பொது உடைமையின் அடிப்படைத் தத்துவம்.

இந்த இருபண்புகள்-பொது உரிமை-பொது உடைமை என்ற இரு மனிதப்பண்புகளையும் திருநாட்டில் ஏற்படுத்த மக்களை நல்லறிவாளர்களாக-தன்னம்பிக்கைக்கொண்ட தமிழர்களாக-வாழ வைக்கவேண்டும்.

தாழ்ந்த தமிழகம்-திராவிடம் தலைநிமிர்ந்து தன், கையே தனக்குதவி, எனத் தன்னைத்தான் நம்பி, தனது உழைப்பால் உயர்ந்து அதே நேரத்தில் தனது உரிமை-உடைமை ஆகியவற்றைப் பிறர்பிடியினின்றும் மீட்டு தன் வாழ்வு-தன்னினவாழ்வு தன்மானவாழ்வு-திராவிட வாழ்வு வாழவேண்டும்.

திராவிட வாழ்வு—திராவிட நாட்டிலே ஏற்பட மக்கள் மனத்தெளிவு அறிவு உணர்ச்சி—ஆராய்ச்சித் திறன் பெற்றவர்களாக வாழவேண்டும்—வாழும் எண்ணம்—மனமாறுதல் விஞ்ஞான ரீதியாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தை எங்கும் பரப்பிடும் அறிவுப்படை திரளட்டும்—திரளட்டும!

அறிவுப் படை திரளட்டும்—திக்கெட்டும் திராவிட இன முரசு கொட்டட்டும்.

பொது உரிமை—பொது உடைமை பூத்துக் குலுங்கிடும் நாடாக—நாட்டவராக நம்மை நாம் தயாரித்துக் கொள்ள, நாமெல்லாம் நடமாடுங் கல்லூரிகளாகி, நாடெங்கும் அறிவுப் படை திரளப்பாடுபடுவோம்—பலனும் காண்போம் பகுத்தறிவின் துணை கொண்டு.

## பரந்த மனப்பான்மை...!

திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சிய முழக்கமும் சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு! என்ற பேச்சும் பிரச்சாரமும் குறுகிய மனப்பான்மையாம்!

குறுகிய மனப்பான்மை கூடாது, தகாது, ஆகாது. பரந்த மனப்பான்மையோடு எதையும் பார்க்கவேண்டும், பேசவேண்டும், செய்யவேண்டும்!! எல்லோரும் இந்தியர், எல்லோரும் இந் நாட்டு மன்னர் இதை உணரவேண்டும்.

மேற்கண்டபடி யெல்லாம் ஒரு சில கருத்துக்கள் நமது இலட்சியத்தைக் கேலி, கிண்டல், கேவலம் என்ற முறையிலே நாட்டில் நடமாடி வருகின்றன.

குறுகிய மனப்பான்மை கூடாது, பரந்தமனப்பான்மை வேண்டும் என்று பேசிவிட்டால் மட்டுமே போதுமா?

எது குறுகிய மனப்பான்மை? எது பரந்த மனப்பான்மை?

மொழி, கலை நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கம் ஆகியவற்றால் ஒன்றுபட்ட இனத்தவர், தம்முடன் முற்றிலும் மாறுபட்ட வேறினத்தவருடன் வாழ மறுப்பது குறுகிய மனப்பான்மையா?

வேறுபட்ட, மாறுபட்ட இனத்துடன் சேர்ந்து வாழ்வதால் தமது இனம் சீரழிவதைக் கண்டு மனம் வெதும்பி, தனித்து வாழ எண்ணிடுவதே குற்றமா? குறைமதியா? குறுகிய மனப்பான்மையா?

எது குறுகிய மனப்பான்மை? எப்படி குறுகிய மனப் பான்மை? எடுத்துக் காட்டட்டும், வெளிப்படையாக, விளக்கமாக, துணிவிருந்தால்!

தனதுமொழி, கலை, கலாச்சாரம் அரசுமுறை மட்டு மல்ல, பொருளாதாரமும் சேர்ந்து பிறஇனத்தால், பிற இனத்துடன் இணைந்து வாழ்வதால் பாதிக்கப் படுவதைக் கண்டித்து, கேட்டு, தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்ள நினைப்பது எப்படி குறுகிய மனப்பான்மையாகும்?

பரந்த மனப்பான்மை கொண்டு வாழ்ந்திடுவது என்பதால் எதையும், எத்தகைய சுரண்டலையும், சுக வாழ்வு செத்த சஞ்சல வாழ்வையும் சகித்துக் கொள்ளத் தான் வேண்டுமா? எப்படி முடியும்?

சகிக்கத்தான் வேண்டும் என்று, சுரண்டி வாழ் வோரே சன்மார்க்கம், சமரசம், பேசவது தானே குறுகிய மனப்பான்மை?

நாட்டிலே உள்ள நானுவித அரசியல், பொருளா தாரத்துறைகளின் பிடிகள் அத்தனையும், இன்று யாரிடம் உள்ளன? எங்கே உள்ளன!

வடநாட்டினரிடம் தானே? வடநாட்டில் தானே! மறுக்க முடியுமா, இதனை?

வடநாட்டு மொழியான இந்தியை இங்கே நுழைத்து திணித்து, திராவிடமொழிகளைச் சிதைத்து திராவிட இனத்தின் பண்பையும், பழக்கவழக்கங்களை யுமே மாற்றித் திராவிடரை தீராத அடிமைத் தளையில் கட்டிப் போட்டிடத் திட்டமிட்டு வேலைகள் நடப்பதை எப்படிச் சகிக்கமுடியும், பொறுக்க முடியும்?

உரிமை கேட்பது குறுகிய மனப்பான்மை! எந்த நீதிக்குப் பொருந்தும் உரிமையை உறிஞ்சுவது, அதையும் விட உரிமையை உறிஞ்சிக் கொண்டே, சுரண்டிக் கொண்டே, உரிமை கேட்போரைப் பார்த்தது பரந்த மனப்பான்மையில்லையே என்று பரிகசிப்பது? குறுகியமதி, குறுகிய மனப்பான்மை என்று வேறு குற்றஞ்சாட்டுகிறது பரந்த மனப்பான்மை!

வேடிக்கையான, விசித்திரமுமான ஆனல் வஞ்சகம் நிறைந்த நாகரிக ஏகாதிபத்தியக் கொள்கையல்லவா, இது?

வெள்ளையன் போனுன்; இன்னும் இந்த வடவரின் கொள்ளைகள்—பொருளாதாரச் சுரண்டல்கள் போன பாடில்லையே!

போகாதது மட்டுமல்ல, பரந்த மனப்பான்மை வேண்டும், வேண்டும் என்று போதனை வேறு புரிகின்றனர், ஆட்சியின் உச்சியில் வீற்றுக் கொண்டு!

எண்ணிப்பார்க்கவேண்டும், எது குறுகிய மதி—குறைமதியென்று?

பிறரது பொருளைச் சுரண்ட முடியாது போய்விடுமே வாணிபத்தின் பேரால் என்பதற்காக மனம்பதைத்து, ஒரு இனத்தையே அடக்கி ஒடுக்கி, நடத்திட முனைவது தான் குறுகிய மனப்பான்மை என்பது நன்கு விளங்கும், எவருக்கும்.

மக்கள் உரிமை—மனிதாபி மானம்—தனி மனித உரிமை, என்றெல்லாம் பேசிக்கொண்டு, அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பில் வாழும் குறிப்பிட்ட இனத்தவரது வாழ்வு வளமற்றுப் போகும் வண்ணம்

ஆட்சியும், ஆட்சிக்குப் பக்கபலமும் இருந்து வருவது எவருக்கும் விளங்காமற்போக முடியாது!

•

"சுயமரியாதையே சுகவாழ்வு பிறப்பால் உயர்வு தாழ் வில்லே. ஜாதிபேதம் ஒரு கற்பனே, மேல் ஜாதிக்காரரின் சுயனலச் சுரண்டல் யந்திரம்," என்று கூறுவது, பிரச் சாரம் புரிவது வகுப்புத்துவேஷம் என்று கூறுகின்றனர்.

யார் வகுப்புத்துவேஷிகள்? எது வகுப்புத்துவேஷம் என்றும் எண்ணிப்பார்க்க வேண்டும்!

வகுப்புத் துவேஷிகள் என்று பிறரைக் குற்றம் காட்டி பேசிடுவோர் உண்மையில் வகுப்புத்துவேஷி களாக இருப்பதைக் காணலாம்!

பார்ப்பனன், நாயுடு, முதலி, செட்டியார், பள்ளன், பறையன் என்று பலப்பல ஜாதிகள்—வகுப்புகள் இருப் பது ஏன்?

பலப்பல ஜாதிகள், வகுப்புகள் இருப்பதனல் தானே வகுப்புத் துவேஷம் வருகிறது?

மனிதருக்குள்ளே, வெறும் பிறப்பினுல் மட்டுமே பேதங்கள் கற்பித்து மனிதனே மனிதரிடமிருந்து பிரித்து வைத்து, உயர்வு—தாழ்வு ஆண்டான்—அடிமைத் தனங் களேக் கற்பித்து மனிதர் மனிதரை இழிவு படுத்திடும் பகுத்தறிவற்ற நிலே மாறவேண்டும், மாற்றப்படவேண் டும், மாற்றித்தான் தீரவேண்டும், மாற்றித்தான் தீர வேண்டும் என்று மனதார உழைப்பது வகுப்புத் துவே ஷமா? எப்படி?

வகுப்புத் துவேஷமொழிய, மனித வாழ்வையே, மனிதத் தன்மையினின்றும் விரட்டி யடிக்கும் விஷ வித்

தான ஜாதிக் கொள்கைகள், மனித எண்ணத்திலிருந்தே விரட்டப்பட வேண்டும், களையப்படவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன், வகுப்புத் துவேஷத்தைக் களைந் தெரியும் நற்பணியை, நல்லறிவுப் பிரச்சாரத்தை—அறிவுக் கருத்தை யூட்டிடும், அறிவுப் பணியைத் தடுத்திட நினைப்பதுதானே வகுப்புத் துவேஷமாகும்?

உண்மையிலேயே இத்தகைய நற்பணிக்கு எதிராகப்பேசுவோரும், எழுதுவோரும், செயலாற்றுவோருந் தான் வகுப்புத் துவேஷத்தை வளர்ப்பவர்கள், அதனல் உண்மையிலேயே உருவான இலாபமும் அடைபவர்கள் என்பதை நன்ருக உணரவேண்டும், மக்கள்.

அறிவு பரவுகிறது. ஆராய்ச்சி மேலோங்குகிறது விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப மக்களது எண்ணங்களும் மாறுகின்றன என்பதை மனதில் கொண்டு மேலும் மேலும் இத்தகைய நல்ல பணியைப் புரிந்திடும் நற்பணியாளர்கட்குத் துணை புரியாவிடினும் தொல்லையாவது தராமல் இருக்கவேண்டும்!

கற்ருேர்—தமது கல்வியின் பயனை, தாமும் பிறரும் உணரும் விதத்தில், காலத்திற்கும், விஞ்ஞானக் கருத்திற்கும் ஒப்ப நடந்து, தமது வாழ்வை நடத்தவேண்டும்—பிறரும் வாழ வகுக்கும் வாழ்வை, பிறரது வாழ்வை வளமற்றதாக மாற்ருத—மாற்ற முடியாத நல்ல வாழ்வை, நாகரிக வாழ்வை வாழவேண்டும்.

மக்களிடத்திலே பழகும் நேரங்களில் எல்லாம், மக்களின் நல் வாழ்வில் நாட்டங் கொள்ளமாட்டார் அனைவரும், மக்களிடையே நல்லறிவுப் பிரச்சாரம் செய்தாக வேண்டும் என விரும்புகிறேன், வேண்டுகிறேன்.

மக்களிடையே, மனமாறுதல் சிந்திக்கும் அளவாவது ஏற்படும்படி செய்யவேண்டும்.

கண்மூடி, யார் ஆண்டாலென்ன, எது நடந்தாலென்ன ? ஏதோ நடக்கிறபடி எல்லாம் நடக்கிறது. "நாம் வந்தவழி, 'கொடுத்து வைத்தது அவ்வளவு தான்', என்ற போக்கிலே மக்கள் வாழ்கிறார்களே, அந்த மந்த புத்தியை மாற்றி, தெளிவை ஏற்படுத்தப் பாடுபடவேண்டும்.

புறவாழ்வு—மனிதரது வெளி வேடம்—நடை உடைகள் மாறிப் பயனில்லை—பலனுமில்லை.

அகவாழ்வு—மனிதனது உள்ளம்—உணர்வு—எண்ணம் கருத்து-கவனிப்பு சிந்தனையும் விழிப்புற்று, மறுமலர்ச்சி யடைந்தாகவேண்டும்.

அப்போதுதான் மனிதரை மனிதர் சுரண்ட முடியாது, சுரண்டும் எண்ணமோ, ஏற்பாடோ, தேவையோ தோன்ற முடியாது, இருக்கவும் முடியாது, நிலைத்திடச் சந்தர்ப்பமும் கிடையாது, கிடைக்காது.

பொது உரிமை—பொது உடைமை என்று, ஏற்கனவே குறிப்பிட்ட இரு நல்ல, மனிதப் பண்பு படைத்தவராக நாம் வாழ வேண்டுமானால், நம்மை நாம் உணர்ந்து, நமது, இனம், மொழி, கலை, கலாச்சாரம், நாகரிகம் ஆகியவற்றைப் பாது காத்திட வேண்டுமானால் நாமெல்லாம் நம்மிடையே நல்லறிவுப் பிரச்சாரம் செய்தாக வேண்டும்.

நடமாடுங் கல்லூரியின்பணி—இயக்கப்பணி தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

குறுகிய மனப்பான்மை யென்று குறைகூறு வதைக் கண்டு ஆயாசப்படக்கூடாது!

வகுப்புத் துவேஷிகள் என்ற தூற்றுதலைக் கண்டு மிரளக்கூடாது.

வறுமை—வளமற்ற வாழ்வுச் சுமை—வேலையில் லாத் திண்டாட்டம் இத்தனைக்குமிடையே அவல வாழ்வு வாழும் நாம் நம்முடைய ஓய்வு நேரத்தைக்கூட வீணாக் கக்கூடாது.

முழு நேரமும் உழைப்போர், உழைக்க விரும்பும், வசதியும் படைத்தோர் உழைக்கட்டும், உழைப்பர்.

மற்றவர்,எங்கெங்கே இருந்தாலும், எப்படிப்பட்ட வாழ்வு—வரண்ட வாழ்வு வாழ்ந்தாலும் நாட்டின் எதிர் காலத்திலே—ஏற்றத்திலே அக்கரை கொண்டு, தமது ஓய்வு நேரத்தை யேனும் இயக்கப் பணியில்—பிரச்சா ரத்தில், ஆக்க வேலைகளில் ஈடுபட்டு, நடமாடுங் கல்லூரி களாய் நாட்டிலே நடமாட வேண்டுகிறேன்.

"நம்முடைய வாழ்வே நன்றாக இல்லை, இதிலே நாட்டுக்கு என்ன உழைப்பது," என்ற சலிப்போ சஞ்ச லமோ கூடாது!

நாடு முன்னேறினால், நாட்டார் நலம் பெறுவர், நாட்டவரிலே நாமும் சேர்ந்தவர்களே என்ற பரந்த மனப்பான்மை கொண்டு பகுத்தறிவுப் பணிபுரிய, வட வரின் அரசியல், பொருளாதாரப்பிடியினின்றும் விடு பட்டு, இனஅரசு காண அறிவுப்படையில் அணிவகுத்து நில்லுங்கள்! நில்லுங்கள்!